# 2019ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
## திணைக்களத்தின் பெயர்: தேசிய திட்டமிடல் திணைக்களம்
## செலவினத்தலைப்பு இல. 237

**பக்க இல.**


**அத்தியாயம் 01- நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு** **52**

1.1 அறிமுகம் 52

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள் 52

1.3 பிரதான தொழிற்பாடுகள் 53

1.4 நிறுவன விளக்கப் படம் 54

1.5 திணைக்களத்தின் பிரதான துறைப்பிரிவுகள் 55

1.6 அமைச்சு / திணைக்களம் / மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள் / நிதியங்கள் 55

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (ஏதாவது இருப்பின்) 56

**அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்** **56**

2.1 பேரண்டப் பொருளாதாரத்துறை 56

2.2 விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடி 56

2.3 கைத்தொழில்கள், வர்த்தகம், மின்வலு மற்றும் எரிசக்தி வளத்துறை 63

2.4 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து 65

2.5 நகர அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வளம் மற்றும் சுற்றாடல் 66

2.6 சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், விளையாட்டு, கலாசாரம் மற்றும் சமய அலுவல்கள் 71

2.7 கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, தகவல் தொடர்பாடல், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் 74

2.8 பிராந்திய அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் சமூக பாதுகாப்பு 80

2.9 பொது முகாமைத்துவம் மற்றும் ஆட்சி 83

2.10 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (ப.வ.செ.தி) 84

பக்க இல.


**அத்தியாயம் 03 – வருடத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** 85

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று 85

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று 87

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று 88

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 90

3.5 வருமானச் சேகரிப்புச் செயலாற்றுகை 90

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 91

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம் மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு 92

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை 92

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 93

**அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்** 93

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்) 93

**அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை** 93

5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைச்சுட்டிக்காட்டுக 93

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையும் அடைவுகள் மற்றும் சவால்களைச் சுருக்கமாக விபரிக்குக 93

**அத்தியாயம் 06 – மனித வள விபரம்** 94

6.1 பதவியணி முகாமைத்துவம் 94

6.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கிறது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக 94

6.3 மனித வள அபிவிருத்தி 94

**அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை** 99

## அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 அறிமுகம்

தேசிய திட்டமிடல் திணைக்களமானது தேசிய திட்டமிடல் சபையாக 1956இல் பிரதம மந்திரியின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டமையானது நாட்டின் திட்டமிடல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்ததுடன் முதலாவது தடவையாக முழு நாட்டினையும் உள்ளடக்கியதானதொரு விரிவான மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்தித்திட்டம் மேற்படி சபையினால் தயாரிக்கப்பட்டது. 1961இல் சபையானது வலுவூட்டப்பட்டதுடன் பிரதம மந்திரி அலுவலகத்தின் கீழ் திட்டமிடல் திணைக்களமாக மாற்றப்பட்டது. இத்திணைக்களமானது குறுகிய கால அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திட்டத்தினைத் தயாரித்ததுடன் திட்டமிடல் செயற்பாட்டில் சுழற்சி முறைத்திட்டக் கருவினை அறிமுகப்படுத்தியது. பின்னர், 1965இல் திணைக்களமானது திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டதுடன் மூலதன வரவு செலவுத்திட்டத்தயாரிப்பு, அபிவிருத்திச் செயற்பாடுகளின் அமுலாக்கத்திற்கான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு ஆகிய தொழிற்பாடுகளும் ஒதுக்கப்பட்டன. 1974இல் திட்டமிடல் திணைக்களமானது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதுடன் அதன் பின்னர் தற்போது வரை காலத்திற்குக் காலம் வெற்றி பெறும் அரசாங்களினால் நிதி, திட்டமிடல் மற்றும் கொள்கை அபிவிருத்திகளுக்கு பொறுப்பாக உள்ள அமைச்சுகளின் கீழ் இணைக்கப்பட்டது. தற்போது, நாட்டின் மிகவும் சிறந்த அபிவிருத்திக்கு ஆலோசகராகவும் வசதியளிப்பவராகவும் இருப்பதுடன் நிதிப்பிரமாணங்கள் இல. 3(2) மற்றும் இல. 35இன் பிரகாரம் அதிகாரம் பகிரப்பட்டு திணைக்களத்தின் தொழிற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன.

### 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள்

**தூரநோக்கு**

நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் சிறந்த ஆலோசகராகவும் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

**பணிக்கூற்று**

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில் வல்லமையை பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.


**நோக்கங்கள்**

1. பொது முதலீட்டினை திறம்படச் செய்தல்
2. பொது முதலீட்டின் சமூக பொருளாதார நன்மைகளை உயர்வாக்குவதற்கு தொழில் நுட்ப வழிகாட்டல் ஊடாக நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய கொள்கைச் சட்டத்திற்கு இணங்க தயாரித்தல்

**1.3 பிரதான தொழிற்பாடுகள்**

- தேசிய மற்றும் துறை சார் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுப்பதில் செயற்பாடுகளை முன்னெடுத்தல்
- நடுத்தர கால பொது முதலீட்டு சட்டடகத்தினை தயாரித்து மேம்படுத்தல்
- அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளை நிதி உதவியின் பொருட்டு மதிப்பீடு மற்றும் சிபார்சு செய்தல்
- அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புகளை வழங்குதல்
- கருத்திட்ட முன்மொழிவு இருப்பை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்
- தேவைப்படும் சந்தர்ப்பங்களில் திட்டமிடலுக்கான உத்திகளை மேம்படுத்தல்
- தேசிய மற்றும் உப தேசிய மட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு வசதியளித்தல்
- விசேட / பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு வழிகாட்டல்
- தேசிய திட்டமிடல் செயற்பாட்டில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (நி.அ.இ) பிரதானப்படுத்தல்
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் திட்ட முன்மொழிவுகளை சிபார்சு செய்தல்
- அபிவிருத்திப் பங்காளர்களுக்கு அபிவிருத்தித் தேவைகளை இனங்காண்பதற்கு வசதியளித்தல்
- திணைக்களத்திற்கு சாட்டப்படும் விசேட செயன்முறைகளை அமுல்படுத்தல்
- சிக்கல் பத்திரங்களைத் தயாரித்தல்
- திட்டமிடல் மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தேசிய மற்றும் பிராந்திய அலுவலர்களின் திறன் அபிவிருத்தி செயற்பாடுகள்
- அரச கொள்கைச்சட்டகத்திற்கு அமைவான சிபார்சு செய்யப்பட்ட கருத்திட்டங்களை அமுலாக்கம் வரை மீள்பார்வையும் கண்காணித்தலும்
- தேசிய திட்டமிடல் திணைக்கள அலுவலர்களின் திறன் அபிவிருத்தி செயற்பாடுகள்
- பொது நிர்வாகம் மற்றும் நிதி

## 1.4 நிறுவன விளக்கப் படம்



## 1.5 திணைக்களத்தின் பிரதான துறைப்பிரிவுகள்

திணைக்களத்தின் தொழிற்பாடுகளை மிகவும் சிறப்பாக கொண்டு நடாத்துவதற்காக திணைக்களமானது 9 துறைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதோடு அத்துறைகள் மேலும் 26 உப துறைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளதோடு அது பொருளாதார அபிவிருத்தியின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு துறையும் அதன் கீழ் காணப்படும் நிரல் அமைச்சுக்கள் தொடர்பான கொள்கை உருவாக்கம், திட்டங்களை தயாரித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை தயாரித்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக உள்ளது.

இவற்றிற்கு மேலதிகமாக திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு உறுதுணை புரிவதற்காக பேரண்டப்பொருளாதாரத் திட்டமிடல், தகவல்களை பரிமாற்றம் செய்தல், நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய மேலும் மூன்று வெவ்வேறான பிரிவுகள் காணப்படுகின்றன.

- **தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்**
- **நிர்வாகப் பிரிவு**
- **நிதிப் பிரிவு**

**திணைக்களத்தின் துறைப்பிரிவுகள்**

- பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி
- விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடி
- கைத்தொழில்கள், வர்த்தகம், மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை
- வீதிகள், துறைமுகங்கள் விமானத்துறை மற்றும் போக்குவரத்து
- வீடமைப்பு, நகர அபிவிருத்தி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம்
- சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியம், விளையாட்டு, கலாசாரம் மற்றும் சமய அலுவல்கள்
- கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, தகவல் தொழினுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம்
- பிராந்திய அபிவிருத்தி, சுற்றுலாத்துறை மற்றும் சமூக பாதுகாப்பு
- பொது முகாமைத்துவம் மற்றும் ஆட்சி

## 1.6 அமைச்சு / திணைக்களம் / மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள் / நிதியங்கள்

திணைக்களத்தின் கீழ் நிதியங்கள் நிறுவனங்கள் எதுவுமில்லை

**1.7.** **வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (ஏதாவது இருப்பின்)**

a) கருத்திட்டத்தின் பெயர்: நிகழ்ச்சித்திட்ட முன்னேற்பாட்டு வசதிக் கருத்திட்டம்

b) கொடை வழங்கும் நிறுவனம் : உலக வங்கி

c) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா. 325 மில்லியன்

d) கருத்திட்டக்காலம் : 2018-2020

## அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

**துறை ரீதியான முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்**

**2.1 பேரண்டப் பொருளாதாரத்துறை**

பேரண்ட பொருளாதாரப்பிரிவானது தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பிரதிபலிப்பதில் திணைக்களத்தின் ஏனைய துறைகளுக்கு உதவுதலை நோக்காகக் கொண்டுள்ளது. இது தேசிய மற்றும் சர்வதேச சூழலைப் பகுப்பாய்வு செய்து, துறை சார்ந்த உத்திகளைத் தயாரித்தல் மற்றும் துறை சார்ந்த கருத்திட்டங்களை ஆய்வு செய்வதற்காக ஏனைய துறைகளுக்கு உள்ளீடுகளை வழங்குகின்றது.

**முன்னேற்றம்**

- பொது முதலீட்டுத்திட்டம் (பொ.மு.தி) 2019-2021 புத்தாக்கம் செய்வதற்கான ஆரம்ப வேலை நிறைவு செய்யப்பட்டது.
- நிதி அமைச்சின் ஆண்டறிக்கை 2018இற்கான பெட்டிக் கட்டுரை தயாரிக்கப்பட்டது.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2019-2021இன் முன்னேற்றத்திற்குரிய தேவையான தகவல்களைச் சேகரித்து மத்திய ஆண்டறிக்கை 2018இற்கு வழங்கியமை.

**2.2 விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடி**

**விவசாயத்துறை**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு குறிப்பிடத்தக்களவு குறைந்து செல்கின்ற போதிலும் இன்னமும் இத்துறையானது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முதுகெலும்பாக விளங்குகின்றது. தற்போது அரசாங்கமானது விவசாயத்துறையை நவீன மயமாக்குவதற்கு உச்ச விளைச்சலை நோக்கிச் செல்லுதல், சிறந்த தொழினுட்பங்கள், சர்வதேசச்சந்தையில் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கான போட்டித்தன்மையை அதிகரிக்கும்

அதேவேளை தேசத்தின் உணவுப் பாதுகாப்பு மட்டத்தினை எதிர்வரும் 5 வருடங்களிற்குள் நிலைபேறானதும் இலாபகரமான சந்தையின் மூலம் உறுதிப்படுத்துதல், சாத்தியமான ஒப்பிடக்கூடிய நன்மைகளை விரிவாக்குதல் ஆகியவற்றின் மூலம் கொள்கை ரீதியிலாக துறையினை நவீன மயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு ஏற்ற வகையில் அரசாங்கத்தினால் கடந்த வருடகாலப்பகுதியில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கத்தினால் நிர்வாக மற்றும் விவசாயத்துறைக்கான சேவை வழங்குதல் மற்றும் சந்தை இணைப்புகள் ஆகியவற்றில் முகங்கொடுத்த பிரச்சனைகளுக்கு ஆகியவற்றுக்கு தீர்வாக விவசாயக் கொள்கையின் அதிகப்படியான உருவாக்கம், சகல உப துறைகளையம் உள்ளடக்கி பிரதான செயற்பாடு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

**பயிர் விவசாயம்**

பயிர் விவசாயமானது நெல், காய்கறிகள் ஏனைய களப் பயிர்கள், பழங்கள், வாசனைத்திரவியங்கள், மலர் வளர்ப்பு மற்றும் பசுமையான பயிர்கள் உள்ளடங்கலாக ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. அரசாங்கமானது பயிர் விவசாயத்தின் உற்பத்தித்திறனை விரிவாக்கிப் பலப்படுத்துவதற்கும் அதனை உறுதி செய்வதற்கும் அவ்வாறே பல முன்னெடுப்புகளை எடுத்தது. இம்முயற்சிகளுள் ஆரோக்கியமான *உணவுப் பொருட்களின் உற்பத்தியை நுகர்வோருக்கு உற்பத்தி செய்வதற்காக சிறந்த விவசாய முறைகளுள் (GAP) அல்லது GAP முறையின் மூலோபாயத்தின் உருவாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் ஏற்றுமதியானது குறிப்பிடக்கூடியதாக இருந்ததுடன் இது இத்துறையின் மிகப் பெரிய அடைவுகளில் ஒன்றாகும்.* உள்நாட்டு நுகர்வோருக்காக பாதுகாப்பானதும் தரமானதும் ஆன விவசாய உணவுகளை வழங்குதலை உறுதிப்படுத்துவதற்கும் சர்வதேசச் சந்தை வாய்ப்புகளை அடைந்து கொள்வதற்கும் பாதுகாப்பானதும் தரமானதும் ஆன சர்வதேச வர்த்தகத்திற்குத் தேவையானவற்றை அடைவதுவும் உடனடியான அதிகரித்த தேவையாக இருந்தது. *GAP* ஆனது மனித சுகாதாரத்துக்கும் சூழலுக்கும் எதிர் மறையான விளைவுகளைக் குறைப்பதற்கும் விவசாய இரசாயனங்களின் முறையான பாவனையையும் நிறுவுவதற்கானதுமான முன்மாதிரியான ஒரு உத்தரவாதமான சான்றளிக்கப்பட்ட முறைமை ஆகும். அவ்வாறே, 2019ஆம் ஆண்டில் சுமார் 12 பில்லியன்கள் மூலதன வரவு செலவுத்திட்டங்கள் பயிர் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விவசாயத்துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 23 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்களுக்கு நிதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன.
- விவசாயம். கிராமிய அபிவிருத்தி. கால்நடை அபிவிருத்தி. நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடிகள் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு பின்னர் விவசாய அமைச்சு என்பவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட 18 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- விவசாயத்துறைக்கான அதிகப்படியான கொள்கை உருவாக்கத்திற்காக சகல தொடர்புடைய அக்கறைதாரர்களுடன் ஒன்றாகக் கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் தொழினுட்ப உள்ளீடுகளை வழங்குவதில் சம்பந்தப்பட்டமை.

**நீர்ப்பாசனம் மற்றும் காணித்துறை**

நீர்ப்பாசனத்துறைக்கான 2019ஆம் ஆண்டிற்குரிய மொத்த செலவினம் சுமார் 45.51 ரூபாய் பில்லியன்களாகும். அவற்றுள் 38.79 ரூபாய் பில்லியன்கள் மூலதன செலவினமாகும். புதிய நீர்வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாரியளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களான மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், களு கங்கை நீர்த்தேக்கக் கருத்திட்டம், கல் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், மொரனா நீர்த்தேக்கக் கருத்திட்டம், உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம், காலநிலை அவதானிப்பு முன்னேற்ற கருத்திட்டம் என்பனவற்றின் பணிகள் தொடரப்பட்டன. அத்துடன் பல்வேறு புனர்நிர்மாண கருத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர் விநியோகிக்கப்பட்டது.

காணித்துறை மீதான 2018ஆம் ஆண்டிற்குரிய மொத்தச் செலவினம் சுமார் 8,644 ரூபாய் மில்லியன்களாகும். அவற்றுள் 3,172 ரூபாய் மில்லியன்கள் மூலதன செலவினமாகும். அவற்றுள் கணிசமான அளவு காணி உரிமை (பிம் சவிய) நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் 2019ஆம் ஆண்டில் குறிப்பிடும் படியான அளவில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அரச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக நிலங்கள் இனங்காணப்பட்டு சுவீகரிக்கப்பட்டன.

**நீர்ப்பாசனத்துறையில் விசேட ஈடுபாடுகள்**

- பொது வழங்கல் மற்றும் பொருளாதார சீரமைப்புகள் அமைச்சின் அனுசரணையுடன் தெரிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளுக்கான நெல் உலர்த்திகளின் பெறுகை மற்றும் மீள் செலுத்தும் அட்டவணைக்கான செலவு மற்றும் நன்மை பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டது.
- நீர்ப்பாசனத்துறையின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு இலங்கை திட்டமிடல் சேவை பயிலுனர்களுக்கு இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகத்தில் நடாத்தப்பட்டது.
- வெள்ளக்குறைப்பு, அனர்த்தத் தடுப்பு மற்றும் நீர்வள அபிவிருத்தி (2019 – 2024) ஆகியவற்றிற்கான கருத்திட்ட இருப்புக்கள் கையேடு தயாரிக்கப்பட்டது.
- நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் கருத்திட்ட பணிப்பாளர்கள், சிரேட்ட அதிகாரிகள் ஆகியவர்களுக்கு கருத்திட்ட திட்டமிடல் செயற்பாடுகளுக்கான விழிப்புணர்வு நடாத்தப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நீர்ப்பாசனத்துறையினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- 08 நீர்ப்பாசனக்கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் 01 காணித்துறைக்கான கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.
- விவசாயம். கிராமிய அபிவிருத்தி. கால்நடை அபிவிருத்தி. நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடிகள் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சு மற்றும் காணிகள் மற்றும் பாராளுமன்றச் மறுசீரமைப்புக்கள் அமைச்சு ஆகியவற்றிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 25 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம், அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவக் கருத்திட்டம், மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம் மற்றும் தல்பிட்டிகல நீர்வள முகாமைத்துவக் கருத்திட்டம் ஆகியவற்றிற்கான வழிகாட்டல் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியமை.
- நடைமுறையில் இருக்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினையும் கொள்கையையும் மீள்பார்வை செய்வதற்கான கூட்டங்களில் பங்கு பற்றியமை.

- நீர்ப்பாசனம் மற்றும் காணித்துறையுடன் தொடர்புடைய தகவல்களை வழங்குவதன் மூலம் பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2019-2021 புத்தாக்கப்படுத்தப்படுவதற்கு உதவியமை.
- ஒருங்கிணைந்த நீர் வழங்கல் மற்றும் நீரியல் வள முகாமைத்துவத்திட்டத்திற்கான கருத்திட்ட அமுல்படுத்தும் திட்டத்திற்கான வரைபு தயாரிப்பதற்கு தொழினுட்ப உதவி நிரல் அமைச்சு, உரிய அக்கறைதாரர்கள் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுடன் இணைந்து வழங்கியமை.

**கால்நடைத்துறை**

கால்நடைத்துறையானது பிரதானமாக பாற்பண்ணை, கோழி வளர்ப்பு, பன்றி மற்றும் ஆடு வளர்ப்பு ஆகிய உப துறைகளைக் கொண்டிருப்பதுடன் கிராமிய வாழ்வாதார அபிவிருத்திக்கு உறுதுணை புரிவதன் ஊடாகவும் மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதன் ஊடாகவும் நாட்டின் பொருளாதாரத்தில் பல்வேறு வகிபாகங்களை வகிக்கின்றது. துறையானது, பிரதானமாக கால்நடை உற்பத்திகளை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும் அதே வேளை அதிக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதுடன் கால்நடை தொழில் முயற்சிகளின் வருமானத்தை அதிகரிப்பதனையும் இலக்காகக் கொண்டுள்ளது. இத்துறையில் 2019ஆம் ஆண்டுக்கான பொது முதலீடானது பிரதானமாக பாற்பண்ணைச் செயலாக்க உருவாக்கம் சிறிய அளவிலான பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்தல், கால்நடைச் சுகாதார மேம்பாடு மற்றும் இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சியும் திறனபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றினைக் கொண்டிருந்தது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கால்நடைத் துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 03 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றுக்கு வழங்கியமை.
- தொடர்புடைய அமைச்சினால் குறிப்பாக கால்நடை அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் மற்றும் கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்:**

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் உள்ள அலுவலர்களுக்கான "கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான புதிய கருத்திட்ட சமர்ப்பிப்பு படிவம்" எனும் ஆரம்ப செயலமர்விற்கு உதவியமை.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக கால்நடைத்துறைக்குரிய குறிப்பினைத் தயாரித்தமை.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக கருத்திட்ட இருப்பினை புத்தாக்கம் செய்தமை.
- "20,000 கால்நடைகளை இறக்குமதி செய்தல்" எனும் கருத்திட்டத்திற்குரிய வழிகாட்டல் குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.
- நடைமுறையில் இருக்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மீள்பார்வை செய்வதற்கான கால்நடைப் பிரிவுடன் தொடர்புடைய கூட்டங்களில் பங்கு பற்றியமை.

**மீன்பிடித்துறை**

மீன்பிடித்துறையானது 2.6 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு வாழ்வாதாரத்தை வழங்கும் அதேவேளை மக்களது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய வகிபங்கைக் கொண்டுள்ளது. தற்போது இத்துறையானது நாட்டின் வருடாந்த விலங்குப் புரதத் தேவையின் 53% இனை மீன் மற்றும் மீன் தொடர்பான உணவுப் பொருட்களின் மூலம் வழங்குகின்றது. 2019ஆம் ஆண்டில் இத்துறைக்கான பொது முதலீடு பிரதானமாகத் துறைமுகங்கள், நங்கூரங்கள், இறங்கு துறைகள் உள்ளடங்கலாக மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், நவீன தொழினுட்பங்களை அறிமுகம் செய்தல், உள்நாட்டு உற்பத்தி, நன்னீர் மீன் உற்பத்திகளை அதிகரித்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி மற்றும் மீன்பிடிச் சமூகத்தினை வலுவாக்கி முன்னேற்றுதல் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மீன்பிடித்துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 07 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றுக்கு வழங்கியமை.

- மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்:**

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் உள்ள அலுவலர்களுக்கான "கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான புதிய கருத்திட்ட சமர்ப்பிப்பு படிவம்" எனும் ஆரம்ப செயலமர்விற்கு உதவியமை.
- தற்போதுள்ள 4 மீன்பிடித்துறைமுகங்கள் தொடர்பாக AFD இனால் ஒழுங்கமைக்கப்பட்ட " ஆரம்ப அறிக்கை – தொழினுட்ப சாத்திய வள ஆய்வு" எனும் வதிவிட செயலமர்வில் பங்கு பற்றியமை.
- குளப்பாதுகாப்பும் அபிவிருத்திக்குமான கருத்திட்டத் தேசிய குழுக் கூட்டத்தில் பங்கு பற்றியமை.
- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையில் நடைபெற்ற நீரியல் வளங்களிற்கான தேசிய குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமை.
- புதிய மீன்பிடியியல் மற்றும் மீன் வளர்ப்புக் கொள்கைக்கான செயலமர்வில் பங்கு பற்றியதுடன் உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.
- மீன்பிடித்துறைத்துறைக்குரிய பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான குறிப்பினைத் தயாரித்தமை.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக கருத்திட்ட இருப்பினை புத்தாக்கம் செய்தமை.
- மீன்பிடித்துறைத்துறையுடன் தொடர்பான நடைமுறையில் இருக்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மீள்பார்வை செய்வதற்கான கூட்டத்தில் பங்கு பற்றியமை.

**ஏனைய நடவடிக்கைகள்:**

- IFAD இனால் ஒழுங்கமைக்கப்பட்ட இலங்கைக்கான உபாயமும் நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடும் எனும் வதிவிட செயலமர்வில் பங்கு பற்றியமை.

## 2.3 கைத்தொழில்கள், வர்த்தகம், மின்வலு மற்றும் எரிசக்தி வளத்துறை

### கைத்தொழில், வர்த்தகம் மற்றும் முதலீடு

நாட்டின் பொருளாதாரத்தில், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகள் ஆகியன முக்கிய உபாயத்துறைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. எனவே தேசிய திட்டமிடல் திணைக்களமானது தொழிற்சாலைகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள், அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகள், சர்வதேச வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை வலுவூட்டுவதற்கு தேவையான கொள்கை ரீதியிலான உள்ளீடுகளை வழங்குகின்றது. மேலும், துறையின் நிதியிடலுக்கு தலையிடும் பொழுது துறையுடன் தொடர்புடைய கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக முன் மதிப்பீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடலாம். நாட்டின் இனங்காணப்பட்ட தேவைகளுக்காக 2019இல் கீழ்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன.

- 49 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு சிபார்சுகள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் ஏனைய உரிய நிரல் நிறுவனங்கள் ஆகியவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.
- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 07 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- கைத்தொழிற்றுறையின் பொருத்தமான தகவல்களை வழங்குவதன் மூலம் பொது முதலீட்டுத்திட்டம் 2018-2021 புதுப்பிப்பதற்கு உதவி புரிந்தமை.
- ‘‘நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’’ தேசிய கொள்கை ஆவணத்தின் உருவாக்கத்திற்கான துறைக் கொள்கைக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2030 நிகழ்ச்சித்திட்டத்திற்கான துறை ரீதியிலான உள்ளீடுகள் வழங்கியமை.

### தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் கொள்கைகளானது தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு வருமானத்தினை அதிகரிப்பதன் ஊடாக பிரதேசத்திலும் வெளிநாடுகளிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் உரிமைகளை பாதுகாப்பதனையும் வளர்ப்பதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. இக்கொள்கை குடியகல்வுத் தொழிலாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அதே வேளை நீண்ட கால நோக்கான பொருளாதாரத்தின குடியகல்வுத் தொழிலாளிகளின் பொறுப்புக்கள்,

நாட்டின் அபிவிருத்திக்கு குடியகல்வுத் தொழிலாளிகளின நன்மைகளை மேம்படுத்தல். ஆகியவற்றினை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

இந்நிலைமையில், நடைமுறையில் உள்ள சட்டங்களையும் ஒழுங்குகளையும் செயற்படுத்தும் போது வளர்ந்து வரும் நிலைமையினை அடைந்து கொள்வதற்கு ஏற்ப தேவையான சகல சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன் அவை யாவும் சர்வதேசத்தின் சிறந்த நடைமுறையுடன் ஒத்துப் போகக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இனங்காணப்பட்ட இத்தேவையினை அடைவதற்கு 2019 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டு சிபார்சுகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 05 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் பொருத்தமான தகவல்களை வழங்குவதன் மூலம் பொது முதலீட்டுத்திட்டம் 2018-2021 புதுப்பிப்பதற்கு உதவி புரிந்தமை.
- ‘‘நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’’ தேசிய கொள்கை ஆவணத்தின் உருவாக்கத்திற்கான துறைக் கொள்கைக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2030 நிகழ்ச்சித்திட்டத்திற்கான துறை ரீதியிலான உள்ளீடுகள் வழங்கியமை.

**மின்வலு மற்றும் எரிசக்தித்துறை**

மின்வலு மற்றும் எரிசக்தித்துறையானது பெற்றோலியக் கைத்தொழில்கள் மற்றும் மின்சாரத்தையும் பிரதிநிதிப்படுத்துகின்றது. இவ்விரண்டு கைத்தொழில்களும் பெரிதளவில் அரசுடமை தொழில்முயற்சிகளால் முகாமை செய்யப்படுகின்றன. ஓப்பீட்டளவில் தனியார் துறையின் பங்களிப்பு பெற்றோலியத்துறையிலும் பார்க்க மின்சாரத்துறையில் மிகவும் குறைந்தளவே காணப்படுகின்றது. இலங்கையின் தனி நபர் மின்சார நுகர்வானது 2018ஆம் ஆண்டில் ஆளுக்கு 650 kwh ஆகக் காணப்படுவதுடன் இது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வாறே, பாரம்பரிய மூலங்களான நிலக்கரி, இயற்கை எரிவாயு, நீர் மற்றும் எண்ணெய்

போன்றவற்றிலிருந்து பாரம்பரியமற்ற மூலங்களான சூரிய சக்தி, காற்று, கடல் அலை, புவிவெப்பம் மற்றும் உயிரி போன்றவை வரை சக்தி உற்பத்தி மூலங்கள் உள்ளன. தேசிய திட்டமிடல் திணைக்களமும் மின்வலு மற்றும் எரிசக்தித்துறையின் அபிவிருத்திக்கு ‘‘காபன் சமநிலையை’’ பாதிக்காத வகையில் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. 2019இல் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பங்களிப்பினை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- 14 கருத்திட்ட முன் மொழிவுகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- ‘‘தேசிய எரிசக்திக் கொள்கை மற்றும் இயற்கை வாயுவிற்கான தேசிய கொள்கை’’ உள்ளடங்கலாக 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- வெளிநாட்டுக் குழுக்களுடன் தொடர்புடைய விடயங்களுக்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- இலங்கைக்கான அணுசக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் குழுவில் பணியாற்றியமை.
- இயற்கை வாயுவின் தேசியக் கொள்கைத் தயாரிப்பில் தேவையான தொழினுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.
- ‘‘இயற்கை வாயுவின் தேசியக் கொள்கை மற்றும் அதன் நடைமுறை உபாயங்களில் பொது மக்களின் ஆலோசனை’’ இற்கு கருத்துகள் வழங்கப்பட்டன.

## 2.4 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து

இத்துறைகள் பிரதானமாக பயணிகளையும் சரக்குகளையும் நாட்டுக்குள்ளேயும் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் கொண்டு செல்வதற்கு வினைத்திறனான போக்குவரத்து சேவைகளை வழங்குவதனை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் முதலீட்டின் பிரதான பிரதேசங்கள் அதிவேகப்பாதை அபிவிருத்தி, வீதிகளை அகலமாக்குதல் மற்றும் புனரமைப்பு, வீதிகளைப்பராமரித்தல் மற்றும் பால நிர்மாணம், நவீன மயப்படுத்தல் ஊடாக பொதுப் போக்குவரத்தை ஊக்குவித்தல், நகர கிராம இணைப்பை மேம்படுத்தல், நகர வாகன நெரிசலைக்குறைத்தல், வீதி விபத்துகள் ஏற்படும் சந்தர்ப்பங்களைக்குறைத்தல் மற்றும் துறைமுக விரிவாக்கம் மற்றும் விமான நிலைய உட்கட்டமைப்பும் வசதிகளும் ஆகும்.

### முக்கிய நிகழ்வுகள்

- உரிய நிரல் அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 47 புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- வீதி அபிவிருத்தி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, போக்குவரத்து மற்றும் விமான சேவை அமைச்சு, துறைமுகம் மற்றும் கப்பற்றுறை அமைச்சு அல்லது ஏனைய அமைச்சுக்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட வீதி மற்றும் போக்குவரத்து தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் கொள்கைப் பத்திரங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன. மொத்தமாக 15 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- தொடர்புடைய கொள்கைகள் மற்றும் உபாயங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு உரிய அமைச்சுக்களிற்கு தொழினுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
    - பின்வரும் குழுக்களுக்கு பங்களிப்புடன் பங்குபற்றியமை
        - தேசிய போக்குவரத்துக் கொள்கை, தேசிய வீதிக் கொள்கை மற்றும் தேசிய துறைமுகம் மற்றும் கடல் சார் கொள்கை, ஆகியன மேம்படுத்தப்பட்டன.
        - பேருந்து அனுமதிப்பத்திரம் வழங்கலும் பேருந்துக்கட்டண மீளாய்வும்.
        - கொழும்பு புற நகர் புகையிரத சேவைக் கருத்திட்டம், இலகு புகையிரத சேவைக் கருத்திட்டம், ஒன்றிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், ‘‘சுகசர’’ பேருந்து நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம், தெற்கு அதிவேகப் பாதை நீடிப்பு, முன்னுரிமைப்பாதைக்கருத்திட்டம் ஆகியவற்றிற்கான கருத்திட்ட வழிகாட்டல் குழுக்களில் பங்களிப்புடன் பங்குபற்றியமை.
- Aide Memoires அபிவிருத்தித் திட்டங்களுக்கான கருத்துக்களை சமர்ப்பித்தமை.

## 2.5 நகர அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வளம் மற்றும் சுற்றாடல்

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறையானது நாட்டின் நகர உட்கட்டமைப்பு உருவாக்கல், தற்போதுள்ள வசதிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் வீடமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான கொள்கை மற்றும் உபாய வழிகாட்டல்கள் என்பவற்றை வழங்குவதற்காக தொடர்புடைய நிரல் அமைச்சுக்களுடன் இணைந்து செயற்படுகின்றது.

பொருளாதாரச் சாத்தியம் குவிக்கப்பட்ட நகரப்பிரதேசங்களினால் நாட்டின் பொருளாதாரத்திற்குக் சாத்தியமான பங்களிப்புகள் செய்யப்படுகின்றன. எமது நாட்டின் சனத்தொகையில் ஏற்கனவே குறிப்பிடத்தக்களவு விகிதமுடையோர் நகரமயமாக்கப்பட்ட

பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனினும், நகரமயமாக்கலினை அளவிடுவதற்கு பொருத்தமான விரிவாக்கப்பட்ட அளவீட்டு முறைகள் குறைவாக இருப்பதனால், நகர மயமாக்கலின் சதவீதத்தினை சரியாக மதிப்பிடுவது மிகவும் கடினமாகும். அங்கீகரிக்கப்பட்ட சாத்தியமான நகர அபிவிருத்திகளுக்கான எதிர்கால முதலீடுகளுக்கான சரியான இடத்தை ஒதுக்குவதும் கடினமானதாகும். அதே போல் நகரப்பிரதேசங்களை உருவாக்குவதற்கு நிலையான நகரமயமாக்கலுக்கான தடைகளை தணிப்பதற்கு அணுகக்கூடிய ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட கட்டமைப்பு தேவைப்படுகின்றது.

நாட்டின் மொத்த 6 மில்லியன் குடும்பங்களில் 5.2 மில்லியன் குடும்பங்கள் மட்டுமே சில அமைப்பான வீடுகளைக் கொண்டுள்ளன. எனவே, வீடுகளைச் சொந்தமாகக் கொண்டிராத குடும்பங்களின் எண்ணிக்கை 800,000 இற்கும் மேல் ஆகும். இப்பிரச்சனையின் அளவு மேலும் தீவரமடைந்து அண்ணளவாக 300,000 தற்போது தற்காலிகமாக பொருத்தக்கூடிய வீட்டு அமைப்புக்கள் உள்ளன.

எனவே, இத்துறையானது நகரப் பிரதேசங்களையும் வீடமைப்புக்களையும் முறையாக அபிவிருத்தி செய்வதற்கு வசதியளிப்பதற்குரிய கருத்திட்டங்களை இனங்காண்பதற்கேற்ற வகையில் நிலையான நகரமயமாக்கலை உருவாக்கல், நிலையான பொருளாதார அபிவிருத்தி, வீடமைப்பு வசதிகளை அதிகரிப்பதன் மூலம் தரமான வாழ்க்கையை மேம்படுத்தல் மற்றும் தேவையான கொள்கைகளை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்கின்றது.

**செயற்பாடுகள்**

- தொடர்புடைய நிரல் அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 12 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கல்
- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புடன் தொடர்புடைய 58 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்பட்டு தேவையான நடவடிக்கைகளுக்காக வழிகாட்டல்
- மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் அறிக்கை ''நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு'' இற்கு ஏற்ப தேசிய கொள்கைச் சட்டகம் தயாரித்தல்
- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புடன் தொடர்புடைய அறிக்கைகள் தயாரித்தல்
- பொது முதலீட்டுத்திட்டம் புதுப்பித்தல்
- புறக்கோட்டை பல்மாதிரி போக்குவரத்து மையம், ஹோமாகம தொழினுட்ப நகரம் மற்றும் உபாய நகரங்கள் நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றுக்கான வழிகாட்டல் குழுக்கூட்டங்களில் பங்குபற்றல்

- உரிய நிரல் அமைச்சுக்களினால் அமுல்படுத்தப்பட்ட இனங்காணப்பட்ட பல்வேறு கருத்திட்டங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகளை, அவை தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் ஒத்துப் பயணிக்கக்கூடியதாக அக்கறைதாரர்களுக்கு வழங்குதல்
- நிரல் அமைச்சுக்களை அறிவு ஊட்டுவதற்கான செயலமர்வுகளை நடாத்தல்
- கொள்கைகளையும் உபாயங்களையும் தயாரிப்பதற்கான தேவையான தொழினுட்ப உதவியினை உரிய நிரல் அமைச்சுக்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கல்

**நீர் வழங்கல் மற்றும் சுத்திகரித்தல்**

பாதுகாப்பான நீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை வழங்குதல் நாட்டிலுள்ள சகல பிரஜைகளின் அடிப்படைத் தேவையாக மட்டுமன்றி நாட்டில் மக்களின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்குரிய முன் தேவையும் ஆகும். தேசிய திட்டமிடல் திணைக்களமானது நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் ஏனைய துறை ரீதியிலான அக்கறைதாரர்கள் ஆகியவர்களுடன் இணைந்து நெருக்கமாகச் செயற்பட்டதுடன் இந்நிறுவனங்களுக்கு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் துறை ரீதியிலான கொள்கைகளை உருவாக்குவதன் தொடர்பிலான தேவையான கொள்கை உள்ளீடுகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் துறை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டமை. வருடக்காலப்பகுதியில் கீழ்வரும் துறைக்குரிய குறித்த செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் நீர் வழங்கல் மற்றும் சுத்திகரித்தல் துறையுடன் தொடர்பாக நிறைவேற்றப்பட்டன.

1. கீழ்வரும் கருத்திட்ட முன்மொழிவுகள் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்றன. அவை ஆராயப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீடுகள் தொடர்புடைய நிறுவனங்களான தேசிய வரவு செலவுத்திட்டம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் நிரல் அமைச்சுக்கள் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
    - முன் மொழியப்பட்ட மடு பாரிய நீர் வழங்கல் கருத்திட்டம் - நிலை II
    - ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்படும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவுகள்

- தொழினுட்ப நகர அபிவிருத்திக் கருத்திட்டம் - ஆரம்பக் கருத்திட்ட கள நீர் வழங்கல் திட்டம், மகேன்வத்தை, பிட்டிபான
- வரவு செலவுத் திட்ட முன்மொழிவு 2019 – “பிரஜாஜால அபிமான் நிகழ்ச்சித்திட்டம்
- விரிவாக்கப்பட்ட தெனியாய நீர் வழங்கல் திட்டம்
- அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - நிலை II (நோக்கம் மாற்றம்)
- நீர் வழங்கல் மற்றும் சுத்திகரித்தல் மேம்பாட்டுக் கருத்திட்டம் - மேலதிக நிதியிடல்
- வவுனியா பாரிய நீர் வழங்கல் கருத்திட்டம்

2. கீழ்வரும் உரிய நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
   - ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம்
   - கல்முனைக்கான கழிவு நீர் சேகரிப்பு, கழிவகற்றலும் சுத்திகரித்தலும் அமுலாக்கம்
   - குடி நீர் வசதிகள் மற்றும் சுத்திகரித்தல் துறை ஒருங்கிணைப்பு தளத்தினை உருவாக்குதல்
   - ஒஸ்ரியன் கடன் திட்டத்தின் கீழ் வட மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் வட மேல் மாகாணம் ஆகியவற்றில் உடனடியாக குடி நீர் வசதிகளை வசதி குறைந்த வசதிகளை உடைய கிராமியச் சமூகங்கள் வழங்கல்
   - அம்பாந்தோட்டையில் உள்ள துறைமுகம் மற்றும் முன்மொழியப்பட்ட கைத்தொழில் வலயம் உள்ளடக்கிய ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர்த்திட்டங்கள்
   - “ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - நிலை I” அமுலாக்கம்
3. பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள் - புத்தள மாவட்டத்திட்டத்திற்கான துறை ரீதியிலான அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
4. Aide Memoires மீளாய்வு செய்யப்பட்டதுடன் வெளிநாட்டு பணிக்குழுவின் நடைமுறையில் உள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர்த்துறையுடன் தொடர்புடைய விடயங்களை கலந்துரையாடுவதற்கு kick off கூட்டங்கள் ஒழுங்கமைத்தமை மற்றும் வழிகாட்டல் குழுக்கூட்டங்களில் பங்குபற்றியமை.
   - உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் AFD ஆகிய சுமார் 10 வெளிநாட்டு பணிக்குழுக்களை அனுமதிக்க பரிந்துரைத்ததுடன்

தொடர்புடைய விடயங்களை கலந்துரையாடுவதற்கு kick off கூட்டங்கள் ஒழுங்கமைத்தமை.

- ஆலோசனைக்குழுக் கூட்டங்கள் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் வெளிநாட்டு பணிக் கூட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 20 கூட்டங்களில் கலந்து கொண்டமை.
- நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர்த்துறையுடன் தொடர்புடைய வழிகாட்டல் குழுக்கூட்டங்களில் பங்குபற்றியமை.

5. பொது முதலீட்டுத்திட்டம் - நீர் வழங்கல் மற்றும கழிவு நீர்த்துறைக்கானதும் 2018-2021 காலப்பகுதிக்கானதும் ஆன பொது முதலீட்டுத்திட்டம் புதுப்பிப்பதற்கு உதவி புரிந்தமை.
6. நீர் வழங்கல் மற்றும கழிவு நீர்த்துறைக்கான பெருந்திட்டம் - நீர் வழங்கல் மற்றும கழிவு நீர்த்துறைக்கான பெருந்திட்டம் தயாரிப்பு நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களமானது பல்வேறு செயலமர்வுகள் மற்றும் கூட்டங்களில் பங்குபற்றி தனது பங்களிப்பினை வழங்கியது.

**சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம்**

சூழல் முகாமைத்துவமானது உரிய சிறப்பான முதலீடுகளைக் கவர்ந்து துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கு வசதி அளிப்பதோடு நிலைபேறான அபிவிருத்திக்கு மிகவும் இன்றியமையாததாகும். பசுமை அபிவிருத்தி என்பது சூழல் முகாமைத்துவ கொள்கையின் முக்கியமான ஒரு வசனமாகும். அதாவது மாசற்ற சூழல் மற்றும் நச்சற்ற உணவுப் பழக்கம் என்ற கொள்கையை ஊக்குவிப்பதாகும். சூழல் துறையானது சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தி மிகவும் செழிப்பான பல்லுயிர் மற்றும் சுற்றுச் சூழல் சேவைகளைப் பாதுகாப்பதனூடாக கரியஅமில வாயுவின் தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் தூய்மையான மற்றும் பசுமையான சூழலைப் பேணுவதை நோக்காகக் கொண்டதாகும். இதன் மூலம் சூழல் தாக்கங்களை குறைத்து நிலைபேறான மற்றும் வினைத்திறனான வள நுகர்வை உறுதிப்படுத்துவதனூடாக மனித நல்வாழ்வை சூழல் தரம் ஆகியவற்றை மேம்படுத்தி இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தைக் குறைப்பதாகும். சுற்றாடல் முகாமைத்துவமானது நிலைபேறான அபிவிருத்திக்கு இன்றியமையாத அம்சமாகும் என்பது தெட்டத் தெளிவாகும். ஆகவே அபிவிருத்திக்கான திட்டமிடலானது சுற்றுச் சூழல் சமநிலையைப் பேணுவதற்காக உயிரியல் பல்வகைத் தன்மை மற்றும் உயிர் பொருட்களின் பாதுகாப்பு மீது கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

நாட்டில் அடிக்கடி ஏற்படும் இயற்கை அழிவுகள் அதிகமாகக் காணப்படுவதனால் இவை பேரழிவுகள் மற்றும் இழப்புக்களுக்கு வழிவகுத்துச் செல்கின்றன. எனவே, அரசாங்கமானது பேரழிவுகளை நிர்வகிக்கும் வகையில் நாட்டில் இயற்கை மற்றும் மனிதனால் ஏற்பட்ட பேரழிவுகளை திறம்பட தடுப்பதன் மூலமும் தணிப்பதன் மூலமும் மனித வாழ்வின் நல்லிணக்கம், செழிப்பு மற்றும் கௌரவத்தை ஏற்படுத்துவதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது.

**விசேட நிகழ்வுகள்**

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 12 முன்மொழிவுகளுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- உரிய நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 14 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2019-2021 (வரைவு) புத்தாக்கம் செய்வதற்கு உதவியமை.
- உரிய நிரல் அமைச்சுக்களும் நிறுவனங்களும் நாட்டின் அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் உபாயங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழினுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

## 2.6 சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், விளையாட்டு, கலாசாரம் மற்றும் சமய அலுவல்கள்

**சுகாதாரத்துறை**

தற்போது, பொதுச் சுகாதார்பராமரிப்பு முறைமையினால் ஏறத்தாழ 50% ஆன வெளி நோயாளர் சிகிச்சை, 90% ஆன உள் நோயாளர் பராமரிப்பு மற்றும் 99% ஆன தொற்றுத் தடுப்பு தேவைகள் வழங்கப்படுகின்றது. எனினும் அதிகரித்து வரும் தொற்றா நோய்கள் தொடர்பாக உயரும் கோரிக்கைகள், முதியோர் பராமரிப்பு மற்றும் தொற்று நோய்களான நெருப்புக்காய்ச்சல், டெங்குக்காய்ச்சல், பொதுச் சுகாதார்பராமரிப்பு முறைமையின் வினைத்திறனையும் தரத்தையும் அதிகரித்தல் ஆகியன முக்கியமாகும். எனவே, சுகாதாரத்துறையின் அரச கொள்கை ஆனது தேசிய சுகாதார சேவையை மேம்படுத்தத் தேவையான நிறுவன மற்றும் கொள்கை மறு சீரமைப்புடன் அதிகரிக்கப்பட்ட முதலீடுகளைச் சுகாதாரத்துறைக்கு முதலிடுவதுடன் ஆரோக்கியமான தேசத்தினை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டுள்ளது. தேசிய திட்டமிடல் திணைக்களமானது 2019 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சுகாதாரத்துறைக்கான கீழ்வரும் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- பதினேழு மதிப்பிடப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் செயற்படுத்துவதற்காக சிபார்சு செய்யப்பட்டன. அவதானிப்புகள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிரல் நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 08 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புகள் தயாரிக்கப்பட்டன.
- சுகாதாரத்துறைக்கான வெளிநாட்டு நிதி உதவித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உரிய நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக பல கூட்டங்கள் நடாத்தப்பட்டு உலக சுகாதார நிறுவனம், உலக வங்கி, KOICA, JICA ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு அவதானிப்புக்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் உள்ள அலுவலர்களுக்கு புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவத்திற்கு ஏற்ப கருத்திட்ட முன் மொழிவுகளை தயாரிப்பதற்கான பயிற்சி 05.07.2019 இல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ‘‘உரிய அலுவலர்களுக்கான புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவத்திற்கு ஏற்ப கருத்திட்ட முன் மொழிவுகளை தயாரிப்பதற்கான பயிற்சி’’ செயலமர்வில் வழங்கப்பட்டது.
- 2019 – 2022 ஆண்டுக்காலப்பகுதிக்கான நடுத்தர கால வரவு செலவுத்திட்டச் சட்டகத்திற்குரிய சுகாதாரத்துறைக்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் புதுப்பிக்கப்பட்டது.

**சமயம், கலாசாம் மற்றும் சமூக நல்லிணக்கத் துறை**

அரசாங்கமானது 2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் வெவ்வேறு கருத்திட்டங்களுக்கு வசதியளிப்பதன் ஊடாக ஆன்மீக மற்றும் ஒற்றுமையான சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலை நோக்காகக் கொண்டு சமயம், கலாசாரம் மற்றும் சமூக நல்லிணக்கத் துறையில் முதலிட்டது. இத்துறையினால் உள்ளடக்கப்படும் விடயப்பரப்புகளாக பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம் சமயம், கலாசாரம், பாரம்பரியம், தேசிய ஆவணக் காப்பகங்கள், தேசிய தொல்பொருட் காட்சியகங்கள், அரச கரும மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய உள்ளன.

2019 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்படி துறைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- 13 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- 01 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அவதானிப்புக்களும் 01 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கருத்துக்களும் சமர்ப்பிக்கப்பட்டன.
- சமயம், கலாசாம் மற்றும் சமூக நல்லிணக்கத் துறைகளில் உள்ள அலுவலர்களுக்கு புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவத்திற்கு ஏற்ப கருத்திட்ட முன் மொழிவுகளை தயாரிப்பதற்கான பயிற்சி 05.07.2019 இல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ''உரிய அலுவலர்களுக்கான புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவத்திற்கு ஏற்ப கருத்திட்ட முன் மொழிவுகளை தயாரிப்பதற்கான பயிற்சி'' செயலமர்வில் வழங்கப்பட்டது.
- 2019 – 2021 ஆண்டுக்காலப்பகுதிக்கான நடுத்தர கால வரவு செலவுத்திட்டச் சட்டகத்திற்குரிய சமயம், கலாசாம் மற்றும் சமூக நல்லிணக்கத் துறைகளுக்கான கருத்திட்ட இருப்பு புதுப்பிக்கப்பட்டதுடன் சமயம், கலாசாம் மற்றும் சமூக நல்லிணக்கத் துறைகளுடன் தொடர்புடைய கூட்டங்களில் பங்குபற்றியமை.

**விளையாட்டுத்துறை**

அரசாங்கமானது 2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலை நோக்காகக் கொண்டு விளையாட்டுத்துறையில் முதலிட்டது. அதே போன்று தொற்றா நோயைக் குறைப்பதன் ஊடாக அரசாங்கம் அதற்காக ஏற்கும் செலவினைக் குறைப்பதும் இந்நாட்டின் சமூகத்தினதும் பண்பாட்டினதும் கட்டாயத் துறையொன்றாக இத்துறையினை நடாத்திச் செல்லுதல் மற்றும் ஆரோக்கியமான தேசத்தினரை உருவாக்கி அவர்களைப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செலுத்த வைப்பதனையும் நோக்காகக் கொண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 03 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன் செயற்படுத்துவதற்காக தேவையான நிதியினைப் பெறுவதற்கான பரிந்துரைகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.
- விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களில் உள்ள அலுவலர்களுக்கு புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவத்திற்கு ஏற்ப கருத்திட்ட முன் மொழிவுகளை தயாரிப்பதற்கான பயிற்சி 05.07.2019 இல்

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ‘‘உரிய அலுவலர்களுக்கான புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவத்திற்கு ஏற்ப கருத்திட்ட முன் மொழிவுகளை தயாரிப்பதற்கான பயிற்சி’’ செயலமர்வில் வழங்கப்பட்டது.

- 2019 – 2021 ஆண்டுக்காலப்பகுதிக்கான நடுத்தர கால வரவு செலவுத்திட்டச் சட்டகத்திற்குரிய விளையாட்டுத்துறைக்கான கருத்திட்ட இருப்பு புதுப்பிக்கப்பட்டதுடன் விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய கூட்டங்களில் பங்குபற்றியமை.

## 2.7 கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, தகவல் தொடர்பாடல், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம்

### கல்வித்துறை

2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கல்வித்துறையின் தரம், சமத்துவம் மற்றும் பொருத்தமான தன்மை ஆகியவற்றினை உறுதி செய்யும் வகையில் கணிசமான அளவு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மூலோபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தேவையான மனித வளங்களை உருவாக்கல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி உள்ளடங்கலாக தேவையான மேம்பாடுகளை பாடசாலைக்கல்விக் கட்டமைப்பிற்குள் உருவாக்குவதற்கு ஏதுவான புதிய கொள்கைச் சீர்திருத்தங்களான 13 வருடக் கட்டாயக் கல்வி, பகல் உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம், அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக சகல பாடசாலைகளிலும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திகளான குடிநீர் வசதி, சுகாதார வசதிகள் வகுப்பறைகள், பரிசோதனைக்கூடங்கள் மற்றும் பரிசோதனைக்கூட உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஏதுவான கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### பூரணப்படுத்தப்பட்ட பணிகள்

- கல்வி அமைச்சுடனும் ஏனைய தொடர்புடைய அக்கறைதாரர்களுடனும் நடாத்தப்பட்ட பொதுக்கல்வித்துறையினை முன்னேற்றிச் செல்வதற்குரிய கலந்துரையாடல்களில் உயிர்ப்புடன் பங்குபற்றியமையும் கல்விச்சீர்திருத்தங்களை முன்மொழிந்தமையும்.
- வழிகாட்டல் குழுக்கூட்டங்களில் பங்குபற்றியமை மற்றும் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அறிவின் மையத்தின் அடித்தளமாக பாடசாலைக்கல்வி

முறைமையினை மாற்றி அமைக்கும் முறைமைக் கருத்திட்டம் ஆகியவற்றிற்கான குழுக்கூட்டங்களினை ஏற்பாடு செய்ததுடன் பங்குபற்றியமை.

- அமைச்சுக்களினாலும் நிரல் நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புடைய கருத்திட்ட இருப்பு புத்தாக்கம் செய்யப்பட்டது.
- கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 12 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.
- கல்வித்துறையில் 5 புதிய கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் மதிப்பிடப்பட்டன.

**உயர் கல்வித்துறை**

பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்கள் விசேடமாக க.பொ.த. (உ/த) இல் தொழினுட்பப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி வசதிகளிற்கான தொழினுட்பப் பீடங்கள் திறக்கப்பட்டமை மற்றும் அரச பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான எண்ணிக்கையை அதிகரித்தமை ஆகியவற்றின் மூலம் 2019 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் உயர்கல்வித்துறையானது விரிவாக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக புதிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் நடைமுறையிலுள்ள பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நவீனமயப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் பட்டதாரிகளின் வேலை வாய்ப்பினை மேம்படுத்துவதற்கு கூடுதலான உந்துதல் அளிக்கப்பட்டது. மேலும் பல பல்கலைக்கழகங்கள் அவற்றுக்குள்ளேயே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை ஊக்கமளிப்பதற்கான வசதிகளை அமைப்பதுடன் கைத்தொழில்களுடன் இணைப்பினை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கான பல நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டதுடன் இந்நிறுவனங்களை விரிவாக்குவதன் மூலம் நாட்டிலுள்ள மாணவர்களுக்கு உயர்கல்விக் கிடைப்பனவு விரிவாக்கப்பட்டது.

**பூரணப்படுத்தப்பட்ட பணிகள்**

- அரச பல்கலைக்கழகங்களிற்கு அனுமதி பெற இயலாத அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி வாய்ப்புக்களை பெறுகின்ற மாணவர்களிற்கான கடன் திட்டத்தினை வழங்குவதற்காகவும் கலந்துரையாடல்களில் கூட்டங்களில் பங்குபற்றியமை.

- வழிகாட்டல் குழுக்கூட்டங்களை ஒழுங்கமைத்து பங்குபற்றியமை மற்றும் பாரிய உயர்கல்வித் துறைக்கான வெளிநாட்டு நிதி உதவிக் கருத்திட்டங்களிற்கான குழுக்கூட்டங்களில் பங்குபற்றியமை.
- உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புடைய கருத்திட்ட இருப்பு புத்தாக்கம் செய்யப்பட்டது.
- உயர் கல்வித்துறையில் 32 புதிய கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் மதிப்பிடப்பட்டன.

**திறன் கல்வி மற்றும் இளைஞர் அலுவல்கள்**

பொருளாதார வளர்ச்சியின் காரணமாக புதிதாக உருவாகி வரும் தொழிற் சந்தைக் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு உயர் திறன் கொண்ட தொழிற் படையென்பது இன்றியமையாததாகும். எனவே, அரசாங்கமானது சுமார் 250,000 திறன் கொண்ட இளைஞர்களை வருடாந்தம் பயிற்றுவிப்பதன் மூலம் 2020 ஆம் ஆண்டளவில் 175,000 தேசிய தொழிற் சான்றிதழ் பெற்றவர்களை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது. மேலும் இதனை உருவாக்குவதற்குரிய கொள்கைப் போக்கானது உருவாக்கப்படும் இலங்கையின் ஒவ்வொரு திறனாளியும் அவர்களது திறமைகள், மென் திறன்கள், செலவிடும் தன்மை மற்றும் தரமான தொழிற்கல்வியின் அடைதல் ஆகியவற்றை முன்னேறச்செய்யும் பொழுது உலகப் பொருளாதாரத்தில் முழுமையான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் திறமையினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும்.

**2019 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட பணிகள்**

- முழுவதுமாக 03 கருத்திட்ட முன்மொழிவுகள் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அபிவிருத்தி ஆகிய துறைகளில்கிடைக்கப்பெற்றதுடன் அவை யாவும் மதிப்பிடப்பட்டு மதிப்பீட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டன. தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிரல் நிறுவனங்களிற்கு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- 08 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்பிக்கப்பட்டன.
- தொழிற் கல்வி நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் அபிவிருத்திப்பங்குதாரர்கள் ஆகியோருடன் பல்வேறு கூட்டங்கள், கருத்திட்டங்களை தயாரிக்கும் விடயங்கள் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகளின் தேவையான தகவல்கள் முன்வைப்பதற்கான கலந்துரையாடல்கள் ஆகியன நடாத்தப்பட்டன. அதே போல் கருத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்துதல் மற்றும் துறைக்கான பொது

முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரித்தல் ஆகியவற்றிற்கான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

- புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கருத்திட்ட சமர்ப்பிப்பு படிவத்தின் கீழ் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் ஆகிய துறைகளில் கருத்திட்டங்களை உருவாக்குவது தொடர்பாக பல்வேறு கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன.
- இதற்கு மேலதிகமாக, விசேடமாக பாடசாலை இடைவிலகல் மாணவர்களினை உள்வாங்குவதற்கான தொழிற்கல்விப்பயிற்சியினை அதிகரிப்பது பிரதானமாக வலியுறுத்தப்பட்டதுடன் 13 வருட கட்டாயக்கல்விக் கொள்கையுடன் இணைந்ததான தொழிற்கல்விப்பயிற்சியின் தரம் அதிகரிக்கப்பட்டது.
- தொழிற்கல்விப் பயிற்சிக்கான அரச முதலீட்டுத் திட்டம் மற்றும் துறைக்கான எதிர்கால போக்கு என்பன தயாரிக்கப்பட்டன.
- திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான அமைச்சுக்களிற்கிடையிலான கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அபிவிருத்தி அமைச்சின் திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான கருத்திட்ட கண்காணிப்பு பிரிவுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளிற்கான பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் செயலமர்வு ஒழுங்கமைப்பு - திறனுடன் தொடர்புடைய நிரல் அமைச்சுக்கான புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவம்

**தகவல் மற்றும் தொடர்பாடல் துறை**

தகவல் மற்றும் தொடர்பாடல் துறையானது தகவல் தொழினுட்பம் (IT), தபால் மற்றும் தொலைத் தொடர்பு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. தகவல் தொழினுட்பமானது வருமானம் உழைக்கும் கைத்தொழில்களான தகவல் தொழினுட்ப சேவை வழங்கல்கள் (ITES), தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் / வியாபாரச் செயற்பாடுகள் வெளியார் சேவைகள் (ICT/BPO) மற்றும் அறிவுசார் (தொழில் வல்லமை) செயற்பாடுகளிற்கு வெளியார் சேவைகளைப் பெறல் (ICT/KPO) போன்ற துறைகளையும் உள்ளடக்கியதாகும்.

அரசாங்கமானது தகவல் தொழினுட்பம் மற்றும் தொழினுட்பத்துறையை பிரதானமாக அறிவுடன் தொடர்புபட்ட துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதில் அரசாங்கமானது உயர் முன்னுரிமை அளித்துள்ளதுடன் தகவல் மற்றும் தகவல் தொடர்புக்கான நுழைவு, இலத்திரனியல் அரச செயற்பாடு மற்றும் சீராக்கல் வசதிகள் என்பவற்றை முன்னேற்றுகின்ற அதேவேளை இலங்கையில் தனியார் துறையானது தகவல் தொழினுட்ப சேவைகளை

வழங்குதல் மற்றும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை சர்வதேச மட்டத்திற்கு தரமுயர்த்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் இத்துறையில் மிகவும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களாக வலைத்தளங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் இணையங்களில் அதிகரித்து வரும் குற்றங்களைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் ஆகியன காணப்பட்டன.

**நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 03 புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- தகவல் மற்றும் தொடர்பாடல், தபால் மற்றும் பொது சன ஊடகம் ஆகிய துறைகளிற்கான கருத்திட்ட இருப்பு தயாரிக்கப்பட்டது.
- தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு, தபால் சேவைகள் அமைச்சு, தகவல் தொடர்பு மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் மற்றும் கொள்கைப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன. அவ்வாறே 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்திற்கான துறைக் குறிப்பும் முதலீட்டு அட்டவணையும் தயாரிக்கப்பட்டன.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத் துறைக்கான குழுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்தமையும் பங்குபற்றியமையும்.
- மேலும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் தரவு முகாமைத்துவ கட்டமைப்பிற்கான கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவுகளைத் தயாரித்தல், அனுமதி அளித்தல், தர வரிசை நுழைவுத்தரத்தினை உருவாக்குதல் மற்றும் மென்பொருளை ஆரம்பிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப நிறுவனத்திற்குமிடையேயான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தியமை.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத் துறை அமைச்சு, ICTA மற்றும் SL/CERT ஆகியவற்றினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் மூளைசாளிகளின் அமர்வுகள் ஆகியவற்றில் பங்குபற்றி உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத் துறைக்கான புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவம் தொடர்பான செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டது.

**விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி**

அரசின் பிரதான இலக்குகளில் ஒன்றாக தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சித்துறையினை உலகளாவிய தரத்திற்கு அபிவிருத்தி செய்தல் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திக்கு உயர் தொழினுட்ப கைத்தொழில் மயமாக்கல் முன் நிற்கின்றது. அரசானது நாட்டிலுள்ள உயர் தொழினுட்ப கைத்தொழில்களை அதன் தரம், உற்பத்தித்திறன் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுடனான போட்டித்தன்மை ஆகியவற்றை முன்னேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அபிவருத்தி மற்றும் ஆராய்ச்சித்துறை ஆனது நனோ தொழினுட்பம், நுண்ணுயிர் தொழினுட்பம் உள்ளடங்கலாக உயர் தொழினுட்பத் துறையில் பல கைத்தொழில்கள் உணவு பதப்படுத்துதல், திசு வளர்ப்பு, பசளை மற்றும் இயந்திர எந்திரவியல் போன்றவற்றின் பெறுமதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட பணிகள்**

- 08 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன் பரிந்துரைகள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிரல் நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி ஆகிய துறைகளிற்கான கருத்திட்ட இருப்பு தயாரிக்கப்பட்டது.
- விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் மற்றும் கொள்கைப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன. அவ்வாறே 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களான கைத்தொழில் தொழினுட்ப நிறுவனம் அடிப்படைக் கற்றலுக்கான தேசிய நிறுவனம் மற்றும் இலங்கை நனோ தொழினுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரிக்கும் வினைத்திறனை அபிவிருத்தி செய்வதற்கான பல கலந்துரையாடல்களை நடாத்தியமை.

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் செயலமர்வு ஒழுங்கமைப்பு - விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி தொடர்புடைய நிரல் அமைச்சுக்கான புதிய கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவம்

## 2.8 பிராந்திய அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் சமூக பாதுகாப்பு

### பிராந்திய அபிவிருத்தி

பிராந்திய அபிவிருத்தித் துறையின் கொள்கை மூலக்கூறானது பிராந்தியத்தில் சாத்தியமானவற்றை இனங்காணல், பிராந்தியங்களிற்குரிய வளங்களின் தனித்துவம் மற்றும் வேறுபட்டதன்மை ஆகியவற்றினால் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் கௌரவமான நிலையினை அடையச் செய்தல் ஆகும். இத்துறையானது சகல துறைகளிலும் செல்வாக்கு செலுத்துவதனால் ஏனைய தேசிய மட்ட அபிவிருத்தி முன்னெடுப்புகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்தியில் பிராந்திய மட்டத்தில் பெறக்கூடிய வளங்களின் நிலைதகு பயன்பாட்டின் முக்கியத்துவம் பிராந்திய அபிவிருத்தித்துறையில் காணப்படும் சிறப்பம்சமாகும். தற்போதைய பொருளாதார வளர்ச்சி, மனித வள அபிவிருத்தி மற்றும் சமூக குறிகாட்டிகள் ஆகியன பிராந்திய அபிவிருத்தி முன்னெடுப்புக்களில் கவனத்தில் எடுத்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்களின் ஊடாகவே மிகக் கூடுதலான பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பிராந்திய சமமின்மையானது முக்கியமான பிரச்சினையாக விளங்குவதனால் அதனை மிகவும் நெருங்கிய தொடர்புடைய வாழ்க்கைத்தரம், மனிதவளச்சுட்டிகள், விவசாய மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் ஆகியவற்றுடன் வெளிப்படுத்தப்பட வேண்டும். சுதந்திரத்திற்கு பின்னரான காலப்பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் இதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம், மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள், மாகாண சபைகளை உருவாக்குதல், கம் உதாவ, ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டம், பிராந்திய பொருளாதார முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டம், கிராம எழுச்சி (கம நெகும) மற்றும் நகர எழுச்சி (புர நெகும), துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (கம் பெரளிய) ஆகியன சில பாரிய முக்கிய முன்னெடுப்புக்கள் நாட்டின் இப் பிரச்சினைக்காக செயற்படுத்தப்பட்டன.

**விசேட நிகழ்வுகள்**

- 22 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டன
- 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் பிராந்திய அபிவிருத்தித் துறை மேம்படுத்தப்பட்டது.
- அவதானிப்புக்கள் தேசிய வரவு செலவுத்திட்டம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிரல் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- உலக வங்கி உள்நாட்டு அபிவிருத்தி ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**சுற்றுலாத்துறை**

சுற்றுலாத்துறையானது மிகவும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கைத்தொழிற்றுறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இது இன்றும் இலங்கைப் பொருளாதாரத்தின் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான துறைகளுள் ஒன்றாகத் திகழ்வதுடன் 2018 ஆம் ஆண்டில் அண்ணளவாக 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன் 4,381 மில்லியன் ஐ.அ.டொ இனை இலங்கைப் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.புதிய சுற்றுலா மூலோபாயத்திட்டம் 2017-2020 ஆனது சுற்றுலா நோக்கு 2025 இனை அடைந்து கொள்வதற்காக வசதியளிப்பதற்கும் சுற்றுலாத்துறைக்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உதவி புரிவதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய சுற்றுலா மூலோபாயத் திட்டத்திற்கமைவாக இலங்கையின் இயற்கை மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தினை பிரதிபலிக்கும் வகையில் இலங்கையைத் தாபிப்பதற்கும் அதேவேளை தொழில்சார் சமூகத்துடன் உள்ளடங்கிய மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புகளை ஏற்படுத்துவதோடு தனியார் துறையினை ஊக்குவிப்பதற்கும் புதிய சந்தைகளிலிருந்து சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கவும் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் அதிகமான தேவைகளைக் கொண்ட புதிய தயாரிப்புக்களை வழங்கவும் அரசாங்கமானது சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. மேலும், அரசாங்கக் கொள்கைகள் அரச தனியார் கூட்டுப் பங்குடமைக் கருத்திட்டங்களின் மூலம் தனியார் துறையுடன் மேலும் சுற்றுலா அம்சங்களையும் சுற்றுச்சூழல் உட்கட்டமைப்பையும் மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்துகின்றன. அரசாங்கமானது நாட்டின் பல பிரதேசங்களில் இனங்காணப்பட்டுள்ள தளங்களாகப் பிரபலமான சுற்றுலாத்தளமாகத் திகழ்ந்து வரும் தெத்துவ சுற்றுச்சூழல் சுற்றுலாப் பகுதி மற்றும் கலாசார முக்கோண சுற்றுலா விரிவாக்கல் திட்டம்,

கொழும்பின் கோட்டை, காலி மற்றும் மாத்தறை ஆகியவற்றில் உள்ள பாரம்பரியக் கட்டிடங்கள், கொக்கல மற்றும் மாத்தறை ஆகியவற்றில் உள்ள குழிப்பந்தாட்ட (golf) கற்கை நெறிகள் மற்றும் கொக்கல கடல் விமான அருங்காட்சியகம் ஆகியன காணப்படுவதுடன் குச்சவெளி மற்றும் கற்பிட்டி ஆகியன சாத்தியமான கருத்திட்டங்களைக் கொண்டுள்ளன. போகாம்பர கலாசார மற்றும் சுற்றுலா மையம் மற்றும் மாத்தறை சுற்றுலா வலய அபிவிருத்தி போன்றன அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களாக விளங்குகின்றன. உயர்செலவுத்திறனுடன் கூடிய பாரிய அளவிலான சுற்றுலாப்பயணிகளின் வருகையினை அடைந்து கொள்வதற்கு இது மிகவும் உறுதியானது.

இதற்கு மேலதிகமாக, சுற்றுலாத்துறையில் காணப்படும் பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக சுற்றுலாவுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை (பிரபலமான மற்றும் பிரபலமற்ற இடங்களுக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி) மேற்கொள்வதற்கும் 10,000 தேசிய தொழிற்பயிற்சி தகைமை மட்டத் திறனுடைய தொழிலாளர்கள் பயிற்சியளிக்கப்படுவதுடன் சுற்றுலாவுடன் தொடர்புடைய சிறியளவிலான கைத்தொழில் முயற்சிகளுக்கும் நிறுவன வளர்ச்சிக்கும் உதவியளிப்பதுடன் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**விசேட நடவடிக்கைகள்**

- நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 1 கருத்திட்ட முன் மொழிவு மதிப்பிடப்பட்டதுடன் 3 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் மேம்படுத்தப்பட்டது.
- தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிரல் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- உலக வங்கியின் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**சமூக பாதுகாப்புத்துறை**

அரசானது முழுச் சமூகப்பாதுகாப்புத் துறையினதும் ஒருமைப்படுத்தப்பட்ட மூலோபாயத்தினை உருவாக்குவதற்கும் குறிப்பிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்களான சகல உதவி தேவைப்படும் சமூகத்தின் ஒரு பிரிவினராகிய பிள்ளைகள், பெண்கள், முதியவர்கள் மற்றும் அங்கவீனமுற்றோர் ஆகியோரின் வாழ்க்கைத்தரத்தினை

உயர்த்துவதுடன் அவர்களை வலுவூட்டி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கச் செய்வதற்காக தனது முழுத்திறனையும் பயன்படுத்துகின்றது. நிரல் அமைச்சுக்களாக ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுாவூட்டல் அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஆகியன பிரதான அமைச்சுக்கள், நலிவுற்ற பிரிவினராக பிள்ளைகள், பாதிக்கப்பட்ட பெண்கள், முதியவர்கள் மற்றும் அங்கவீனமுற்றோர் ஆகியோர் உள்ளடங்கலாக அவர்களின் நல்வாழ்வினை உறுதிப்படுத்துவதற்குரிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட பணிகள்**

- **கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தலும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் சமர்ப்பித்தலும்** - நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 10 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் உரிய அமைச்சுக்களினால் தயாரிக்கப்பட்ட 8 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்களும் சமர்ப்பிக்கப்பட்டன.
- **கொள்கைகளை உருவாக்கமும் மீள்பார்வையும்** - பிள்ளைப் பராமரிப்புக் கொள்கை மீளாய்வு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- **"இலங்கையின் சமூக பாதுகாப்புத்துறைக் கட்டமைப்பின் மதிப்பீடு மற்றும் மனித அபிவிருத்தி அறிக்கை (வரைவு)" இற்கான அவதானிப்புகள் வழங்கியமை**
- **தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பிரதிநிதியாக கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றில் பங்கு பற்றியமை** - இத்துறையுடன் தொடர்புபட்ட பல்வேறு நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் ஆகியவற்றில் பங்கு பற்றி சமூக பாதுகாப்புத் துறையின் முன்னேற்றத்திற்கு தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

## 2.9 பொது முகாமைத்துவம் மற்றும் ஆட்சி

வினைத்திறனுடையதும் பொதுமுகாமைத்துவத்தின் பிரதான உபாயமாக "புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அரச சேவையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் புதிய முகாமைத்துவ முறைமை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு ஆகியவற்றினை அறிமுகப்படுத்துவதன் முலம் மாற்றக்கூடிய முகாமைத்துவ முறைமை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு ஆகியவற்றினால் அரச சேவைகளை பொது மக்களிற்கு வினைத்திறனாகவும் வாடிக்கையாளர் நட்பு சேவையாகவும் வழங்குவது" காணப்படுகின்றது.

பயனுள்ளதுமான அரச சேவைகளை வழங்குவதற்கு, நாட்டின் பொது நிர்வாகத் துறையானது நிறுவன ரீதியிலான, மனித வளங்கள் மற்றும் உற்பத்தியுடனான சேவை வழங்குதல் என்பன தொடர்ந்தும் மேம்படுத்தப்படல் முக்கியமாகும். அரசானது அபிவிருத்தி நடவடிக்கைகளில் தனியார் துறை ஈடுபடுவதற்கு அரச துறையானது குறிப்பிடத்தக்க அளவில் வசதியளிப்பதனை அங்கீகரிக்கின்றுது. எனவே மனித மற்றும் மூலதன வளங்களின் இயலளவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துதல் மிகவும் முக்கியமானதாகும். இத்திணைக்களத்தில் பொது நிர்வாகத்துறை ஐந்து முக்கிய பிரிவுகளான பொது நிர்வாகம், தேசிய பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் ஆகியன உள்ளடங்கலாக 25 ''விசேட செலவுகள் பிரிவுகள்'' காணப்படுகின்றன. தேசிய திட்டமிடல் திணைக்களமானது துறையின் மேம்பாட்டிற்கு கடந்த வருடம் பல்வேறு வகையில் செய்யப்பட்ட பங்களிப்புகள் கீழே விபரிக்கப்படுகின்றன.

- 29 கருத்திட்ட முன்மொழிவுகளிற்கு செயற்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதுடன் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு பரிந்துரைக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- பொது நிர்வாக முகாமைத்துவத் துறைப் பிரிவுடன் தொடர்புடைய பல்வேறு அமைச்சுக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்குரிய அவதானிப்புகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- இத்துறையுடன் தொடர்புபட்ட பல்வேறு நிறுவனங்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் ஆகியவற்றில் பங்குபற்றி தேவையான உள்ளீடுகள் வழங்கி பொது நிர்வாகத்துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.
- உரிய அமைச்சுக்களிற்கு ஏற்ற கொள்கைகள், உபாயங்கள் உருவாக்குவதற்குரிய தொழினுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

## 2.10 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (ப.வ.செ.தி)

தேசியப் பட்டியலிலுள்ள 29 பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா.278, 272,000 பெறுமதியான 2077 கருத்திட்ட முன்மொழிவுகள் ப.வ.செ.தி இன் கீழ் சிபார்சு செய்யப்பட்டு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு முன்னளிக்கப்பட்டன.

## அத்தியாயம் 03 – வருடத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ – எப்

### 31 டிசம்பர் 2019 இல் முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ரூபா.

| | | குறிப்பு | உண்மையான 2019 | உண்மையான 2018 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ -1 |
| - | உள்நாட்டுப் பொருட்கள் சேவைகளுக்கான வரி | 2 | - | - | ஏசீஏ -1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ -1 |
| - | வரியில்லா வருமானம் மற்றும் பிற | 4 | - | - | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமல்லாத பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி முற்பணம் | | 105,489,000 | 92,455,000 | ஏசீஏ -3 |
| - | வைப்புகள் | | 29,115 | 97,537 | ஏசீஏ -4 |
| - | முற்பணக்கணக்குகள் | | 8,093,164 | 5,669,037 | ஏசீஏ - 5/5(அ) |
| - | வேறு பெறுகைகள் | | 4,725,440 | 4,643,642 | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)** | | **118,336,719** | **102,865,216** | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ=(அ)+(ஆ)** | | **118,336,719** | **102,865,216** | |
| | **கழி: செலவினம்** | | | | |
| - | **மீண்டெழும் செலவினம்** | | - | - | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 72,929,000 | வேதனாதிகள், சம்பளங்கள் & பிற ஊழிய நன்மைகள் | **5** | 72,655,651 | 63,292,763 | |
| 26,260,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | **6** | 25,218,218 | 24,279,080 | **ஏசீஏ -2 (ii)** |
| 860,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | **7** | 859,075 | 890,243 | |
| - | வட்டிக்கொடுப்பனவுகள் | **8** | - | - | |
| - | ஏனைய மீண்டெழும் செலவினம் | **9** | - | - | |
| **100,049,000** | **மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)** | | **98,732,944** | **88,462,086** | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 3,000,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | **10** | 2,672,121 | 3,538,775 | |
| | மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல் | **11** | 2,937,101 | 825,100 | |
| - | மூலதன மாற்றல்கள் | **12** | - | - | **ஏசீஏ -2 (ii)** |
| - | நிதிச்சொத்துக்களை கையகப்படுத்தல | **13** | - | - | |
| 4,500,000 | திறன் மேம்பாடு | **14** | 4,411,292 | 2,159,137 | |
| 327,100,000 | பிற மூலதனச் செலவினம் | **15** | 40,862,055 | 27,089,276 | |
| **337,591,000** | **மொத்த மூலதனச் செலவினம் (உ)** | | **50,882,568** | **33,612,287** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவு (ஊ)** | | **5,619,305** | **6,815,025** | |
| | **வைப்புக் கொடுப்பனவு** | | 29,115 | 97,537 | **ஏசீஏ -4** |
| | **முற்பணக் கொடுப்பனவு** | | 5,590,190 | 6,717,489 | **ஏசீஏ - 5/5(அ)** |
| | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | **155,234,817** | **128,889,399** | |
| **437,640,000** | **31 டிசம்பர் 2019இல் உள்ளவாறான முற்பண மீதி ஏ = (இ-எ)** | | **(36,898,098)** | **(26,024,183)** | |

**3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று**

ஏசீஏ -பீ

## 31 டிசம்பர் 2019இல் உள்ளவாறான

## நிதி நிலைமை பற்றிய கூற்று

| | குறிப்பு | உண்மையான | |
|---|---|---|---|
| | | 2019 | 2018 |
| | | ரூ. | ரூ. |
| <u>நிதி அல்லாத சொத்துக்கள்</u> | ஏசீஏ -6 | | |
| சொத்து, பொறித்தொகுதி & உபகரணம் | | 102,640,033 | 100,926,730 |
| <u>நிதி சொத்துக்கள்</u> | ஏசீஏ -5/5(அ) | | |
| முற்பண கணக்குகள் | ஏசீஏ -3 | 14,335,196 | 16,838,170 |
| பணம் & பணத்திற்குச் சமமானவை | | 15,227 | 93,099 |
| **மொத்த சொத்துகள்** | | **116,990,456** | **117,857,999** |
| **நிகர சொத்து / பங்கு** | | | |
| திறை சேரி சொத்துக்குரிய நிகர சொத்து, பொறித் தொகுதி உபகரண ஒதுக்கு வாடகை, பணி முற்பண ஒதுக்கு | | 14,335,196 | 16,838,170 |
| | ஏசீஏ -5(ஆ) | 102,640,033 | 100,926,730 |
| <u>நடைமுறை பொறுப்புக்கள்</u> | ஏசீஏ -4 | | |
| வைப்புக் கணக்கு | ஏசீஏ -3 | -<br>- | - |
| முற்பண மீதி | | 15,227 | 93,099 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **116,990,456** | **117,857,999** |

பக்க இலக்கம் 5 முதல் 54 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 55 முதல் 62 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ...................... | ...................... | ...................... |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: எஸ். ஆர். ஆட்டிகல | பெயர்:ஆர்.எச்.டபிள்யு.ஏ.குமாரசிறி | பெயர் :என்.விஜேவீர |
| பதவி : செயலாளர் | பதவி : பணிப்பாளர் நாயகம் | |
| திகதி : .02.2020 | திகதி : \ 8 .02.2020 | திகதி :18 .02.2020 |

N. Wijeweera
Director
Department of National Planning
Ministry of Finance, Economic & Policy Development
The Secretariat
Colombo - 01

R. H. W. A. Kumarasiri
Director General
Department of National Planning
Ministry of Finance, Economic & Policy Development
The Secretariat
Colombo - 01

S. R. Attygalle
Secretary to the Treasury and Secretary to the
Ministry of Finance, Economy and Policy
Development
The Secretariat
Colombo 01

**3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று**

**ஏசீஏ -சீ**

## 31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்காலப்பகுதிக்கான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

| | உண்மையான | |
|---|---|---|
| | **2019** | **2018** |
| | **ரூ.** | **ரூ.** |
| தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல் | | - |
| மொத்த வரி பெறுகைகள் | - | - |
| கட்டணம், அபராதம், தண்டப்பணம் மற்றும் உரிமங்கள் | - | - |

| | | |
|---|---|---|
| இலாபம் | - | - |
| வருமானமல்லாத பெறுகைகள் | - | - |
| பிற தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 201,392 | 856,157 |
| பெறப்பட்ட முற்பணம் | 105,489,000 | 92,455,000 |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)** | **105,690,392** | **93,311,157** |
| | | |
| <u>**கழி - காசு செலவிடல்:**</u> | | |
| ஆள்சார் வேதனாதிகள் & தொழிற்பாட்டுக் கொடுப்பனவு கொடுப்பனவு | 89,701,255 | 80,512,599 |
| மானியம் & மாற்றல் கொடுப்பனவுகள் | - | - |
| பிற செலவின தலைப்புகளுக்கான செலவினம் | 195,667 | |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம் | 15,227 | 93,099 |
| **தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)** | **89,912,149** | **80,605,698** |
| | | |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **15,778,243** | **12,705,459** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு** | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபம் | - | - |
| சொத்து விற்பனை & பௌதிக ஆதன விற்பனை | - | - |
| கடன் அறவீடுகள் | - | - |
| முற்பண அறவீடுகள் | 282,439 | 224,315 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஈ)** | **282,439** | **224,315** |
| | | |
| <u>**கழி - காசு செலவிடல்::**</u> | | |
| பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மாணம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்துதல் | 11,880,197 | 7,898,960 |
| ஏனைய முதலீடு | | |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 4,151,370 | 4,933,278 |
| **முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப்பாய்ச்சல் (உ)** | **16,031,567** | **12,832,238** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(15,749,128)** | **(12,607,923)** |

| | | |
|---|---:|---:|
| **தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் (எ)=( இ) + (ஊ)** | **29,115** | **97,536** |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்கள்</u> | | |
| உள்நாட்டு கடன் பெறுகை | - | - |
| வெளிநாட்டு கடன் பெறுகை | - | - |
| பெறப்பட்ட நன்கொடை | - | - |
| பெறப்பட்ட வைப்பு | | |
| **நிதிச் செயற்பாகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (ஏ)** | **-** | **-** |
| <u>**கழி - காசு செலவிடல்:**</u> | | |
| உள்நாட்டு கடன் தொகை மீள் கொடுப்பனவு | - | - |
| வெளி நாட்டு கடன் தொகை மீள் கொடுப்பனவு | - | - |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 29,115 | 97,536 |
| **நிதிச் செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)** | **29,115** | **97,536** |
| **நிதிச் செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)= (ஏ) - (ஐ)** | **(29,115)** | **(97,536)** |
| **காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) - (ஒ)** | **-** | **-** |
| **சனவரி 01 அன்று ஆரம்பக்காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31 அன்று இறுதிக்காசு மீதி** | **-** | **-** |

### 3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் - -

### 3.5 வருமானச் சேகரிப்புச் செயலாற்றுகை – பொருந்தாது

ரூ. ,000

| வருமான மதிப்பீடு | வருமான மதிப்பீடு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமான | |
|---|---|---|---|---|---|
| | | அசல் | இறுதி | தொகை (ரூபா.) | இறுதி வருமான மதிப்பீடு % |
| - | - | - | - | - | - |

**3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை**

ரூ. ,000

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் | இறுதி | | |
| **மீண்டெழும் (11)** | 97,440,000 | 100,049,000 | 98,732,944 | 98.68 |
| உப மொத்தம் | **97,440,000** | **100,049,000** | **98,732,944** | **98.68** |
| **மூலதனம்** | | | | |
| உள்நாட்டு நிதி (11) | 8,900,000 | 10,491,000 | 10,020,513 | 95.52 |
| நிகழ்ச்சிக் கருத்திட்ட ஏற்பாட்டு வசதி வெளிநாட்டு நிதி (12) | 325,000,000 | 325,000,000 | 39,002,371 | *16.18 |
| வெளிநாட்டு நிதியுடன் தொடர்பான உள்நாட்டுச் செலவு (17) | 2,100,000 | 2,100,000 | 1,859,684 | 88.56 |
| உப மொத்தம் | **336,000,000** | **337,591,000** | **50,882,568** | **15.07** |
| மொத்தச் செலவு | **433,440,000** | **437,640,000** | **149,615,512** | **34.18** |

*நிகழ்ச்சித்திட்ட முன்னேற்பாட்டு வசதிக் கருத்திட்டம் நிதி கிடைப்பனவினை உறுதிப் படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள், அரசாங்க நிறுவனங்கள் சிறப்பாக வினைத்திறனான பொது முதலீடுகளைச் செய்வதற்குரிய திட்டமிடலுக்கு அனுமதித்தல் ஆகியவற்றை வழங்குகின்றது. ஆரம்பத்தில் ஒன்பது கருத்திட்டங்கள் 2018-2019 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு இனங்காணப்பட்டன. அவற்றுள் ஏழு கருத்திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விரிவான வரைவாக்கம் தயாரிக்கப்பட்டுள்ளன. இரண்டு கருத்திட்டங்கள் பிற்போடப்பட்டுள்ளன. குறைந்தளவான கருத்திட்ட நிதி விநியோகத்திற்கான காரணங்கள் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 4/2019 மற்றும் 5/2019 ஏற்ப மில் 84 (மொத்த ஒதுக்கீட்டில் 25%) கட்டாய சேமிப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.
- மூன்று கருத்திட்டங்களுக்கான கடன் ஒப்பந்தங்கள் அட்டவணைப்படுத்திய காலத்திற்கு முன் ஏற்படுத்தப்பட்டதனால் வருடக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ஏற்படவில்லை
- பெரும்பாலான முன்னாயத்த செயற்பாடுகள் அரசாங்க அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டதனால் எதிர்பார்க்கப்பட்ட கடன் நிதி பயன்படுத்தப்படவில்லை

அரசாங்க முன்னுரிமைகள் மாற்றமடைந்ததனால் சில கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை

- மட்டுப்படுத்தப்பட்ட நிதியினால் சில கருத்திட்டங்கள் கட்டமாக்கப்பட்டன.

**3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம் மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு**

ரூ. ,000

| தொ. இல | அமைச்சு / திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் | இறுதி | | |
| | | பொருத்தமற்றது | | | | |

**3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை**

ருபா. ,000

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2019 திகதிய சுற்றாய்வுச்சபை அறிக்கை படி மீதி | 31.12.2019 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் மீதி % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | | | | |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 102,640,033 | 102,640,033 | | |
| 9153 | காணி | | | | |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துக்கள் | | | | |
| 9155 | பௌதிக வளங்கள் | | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | | | | |
| 9180 | சொத்துக்கள் | | | | |

**3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

கணக்காய்வாளர் நாயகத்தினால் இறுதி கணக்காய்வு அறிக்கை பின்னிணைப்பு I ஆக இணைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

**4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்)**

| குறிப்பீட்டுச் சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100%- 90%** | **75%-89%** | **50%- 74%** |
| உருவாக்கப்பட்ட கொள்கைகளின் எண்ணிக்கை | 100% | | |
| மதிப்பிடப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | | 82% | |
| சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களின் எண்ணிக்கை | 100% | | |
| கணிப்பிடப்பட்ட தேசிய உப - தேசிய திட்டங்கள் எண்ணிக்கை | 100% | | |
| சிபார்சு செய்யப்பட்ட முன்மொழிவுகளின் (பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்-DCB) எண்ணிக்கை | 100% | | |

## அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

**5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைச்சுட்டிக்காட்டுக**

தேசிய திட்டமிடல் திணைக்களமானது நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஆகியன நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை பிரதானப்படுத்தி அவற்றின் அபிவிருத்தி திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகள் ஆகியவற்றுக்குட்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது.

**5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையும் அடைவுகள் மற்றும் சவால்களைச் சுருக்கமாக விபரிக்குக.**

பொருந்தாது

## அத்தியாயம் 06 – மனித வள விபரம்

### 06.1 பதவியணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவி வெற்றிடம் / அதிகப்படியான |
|---|---|---|---|
| சிரேட்ட | 59 | 46 | 13 |
| மூன்றாம் நிலை | 02 | 00 | 02 |
| இரண்டாம் நிலை | 28 | 17 | 11 |
| ஆரம்ப நிலை | 29 | 20 | 09 |

**06.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கிறது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக**

அலுவலர்கள் பற்றாக்குறையாக உள்ளமையினால் திணைக்களச் செயற்பாடுகளில் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

### 06.3 மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்ட காலம் | மொத்த முதலீடு (ரூ.) உள்நாட்டு வெளிநாட்டு | | நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (வெளிநாட்டு /உள்நாட்டு) | வெளியீடு / பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| விடுமுறைக் கடமையை கையாளும் அலுவலருக்கான கடமை | 01 | 01 நாள் | 3000.00 | | உள்நாட்டு | அலுவலகக் கடமையுடன் தொடர்புடைய அறிவினை மேம்படுத்தல் |
| அலுவலக முகாமைத்துவ முறைமை | 01 | 06 நாட்கள் | 13000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| போக்குவரத்து முகாமைத்துவம் | 01 | 02 நாட்கள் | 7000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| அலுவலகக் கட்டமைப்பும் ஒழுங்கு முறைகளும் | 11 | 02 நாட்கள் | 93500.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| விரிவான பெறுகை நடைமுறை | 01 | 05 நாட்கள் | 30000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| ஓய்வுதிய sachem நிகழ்ச்சித்திட்டம் | 01 | 01 நாள் | 5000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| பொதுப் பெறுகை ஒப்பந்த நிர்வாக டிப்ளோமா - மிலோதா | 06 | 01 வருடம் | 600000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| நிதி ஒழுங்கு | 01 | 2 நாட்கள் | 8500.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 01 வருடம் | 165000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல் | 03 | 01 நாள் | 21000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| அரச துறையிலுள்ள தொழில்சார் கணக்காளர்களுக்கான நெறிமுறைப் பொறுப்பு | 01 | 01 நாள் | 1500.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| விரிவான பெறுகை நடைமுறை | 02 | 02 நாட்கள் | 17000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| நிதிக்கூற்றுக்கள் (இறுதிக் கணக்குகள்) | 02 | 01 நாள் | 14000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| புதிய வரிச் சட்டம் | 02 | 01 நாள் | 14000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| சாரதி மற்றும் சிற்றூழியருக்கான நெறிமுறைகளும் ஒழுக்கங்களும் | 07 | 02 நாட்கள் | 59500.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானத்திற்கான மாநாடு | 01 | 01 நாள் | 3000.00 | | உள்நாட்டு | -அவ்வாறே - |
| பணிக்குழுக் கூட்டம் – தென் கொரியா | 01 | 18-19 பங்குனி | 57710.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| ஐஒ (EU) இலங்கை பணிக்குழு அபிவிருத்தி ஒத்துழைப்பு – பெல்ஜியம் | 01 | 12-16 மாசி | 581754.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| SASEC கரையோர ஒத்துழைப்பு – செயலமர்வு | 01 | 6-8 மாசி | 27332.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| பல்துறை அணுகுமுறையின் ஊடாக போசணையை ஊக்குவித்தல், விவசாயத்துடன் தொடர்புடைய விசேட கவனக்குவிப்புத் தலையீடு தேசிய கொள்கைகளிலிருந்து பிராந்திய மட்ட அமுலாக்கச்செயலமர்வு – போத்துக்கல் | 01 | 05-06 புரட்டாதி | 58207.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| வெள்ளப் பாதுகாப்பு ஆரம்ப எச்சரிக்கை அவசரத்தீர்வு ஐஅநா | 02 | 18-25 ஐப்பசி | 89984.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உப பிராந்திய முன்னாயத்த தேசிய ரீதியிலான துணியப்பட்ட பங்களிப்புக்கள் தெற்காசியாவில் செயலமர்வு - தாய்லாந்து | 01 | 26-27 புரட்டாதி | 22333.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| ஆசிய பொருளாதார ஒருங்கிணைப்பு மாநாடு / செயலமர்வு - ஜப்பான் | 01 | 13-14 ஆனி | 56330.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| பூட்டான், நேபாளம், இலங்கைக்கான போசணைக்கான அரச நிதியிடலை கணிப்பிடுவதற்குரிய நாடுகளுக்கிடையிலான ஆலோசனை நிகழ்ச்சி - இந்தோனேசியா | 01 | 09-13 புரட்டாதி | 57284.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| விவசாய நவீன மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுகான அக்கறை தாரர்களுக்குரிய தொழினுட்ப உதவி வியட்நாம் | 02 | 12-16 ஆவணி | 101524.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| பொதுப் பெறுகையும் ஒப்பந்த நிர்வாகமும் (டிப்ளோமா – மிலோதா) 2ம் நாட்டு விஜயம் - ஐஇ (UK) | 01 | 04-14 ஆவணி | 642701.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| உட்கட்டமைப்பு நிருவாகத்தில் மூன்றாம் உலக வட்டமேசை மாநாடு - தென் கொரியா | 01 | 23-24 வைகாசி | 120432.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| 2ம் நாட்டு பயிற்சி விஜயம் - மலேசியா (SLIDA இனால்) | 02 | 29 புரட்டாதி 05 ஐப்பசி | 104424.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| பூட்டான், நேபாளம், இலங்கைக்கான போசணைக்கான அரச நிதியிடலை கணிப்பிடுவதற்குரிய நாடுகளுக்கிடையிலான ஆலோசனை நிகழ்ச்சி - இந்தோனேசியா | 01 | 09-13 புரட்டாதி | 55603.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| பிராந்திய பயிற்சி செயலமர்வு – ஆசிய | 01 | 26 மாசி - | 39390.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அபிவிருத்தி வங்கி – சிங்கப்பூர் | | 02 பங்குனி | | | | |
| முன்பிள்ளைப்பருவ கல்வி முன்னுரிமைச் செயலமர்வு - சீனா | 01 | 23-27 புரட்டாதி | 37140.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| சமூகப் பாதுகாப்பு பயிற்சி நிலையம் | 02 | 16-27 புரட்டாதி | 250788.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| கோரப்படாத முன்மொழிவுகள் கொள்கைச் செயலமர்வு - சிங்கப்பூர் | 01 | 17-18 புரட்டாதி | 22185.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| சர்வதேசக் கருத்தரங்கு – சீனா சீனாவின் உணவுப்பாதுகாப்புக் கொள்கையையும் அனுபவத்தினையும் பகிர்தல் | 01 | 24-27 சித்திரை | 42920.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| நாடுகளுக்கிடையிலான பால் ரீதியான பொறுப்பு பயிற்சி செயலமர்வுகள் – இந்தியா | 01 | 11-12 புரட்டாதி | 160 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| விஞ்ஞானக் கொள்கை கலந்துரையாடல் பயிற்சி IPBES ஆசிய பசுபிக் பிராந்திய கணிப்பீடு – நேபாளம் | 01 | 25 - மாசி 01 பங்குனி | 75225.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| அறிவு பரிமாற்றல் விஜயம் - வியட்நாம் | 09 | 27 ஐப்பசி -02 கார்த் | 468,225.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| பிராந்திய செயலமர்வு உலகமயமாக்கல் பொருளாதார புள்ளி விபரங்கள் இந்தோனேசியா | 02 | 13-15 ஆனி | 127930.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| நீண்ட நடுத்தர கால அபிவிருத்தித்திட்டம் பட்டிப் பாதை (belt & road) ஆரம்பம், சிரேஷ்ட அதிகாரிகளுக்கான கருத்தரங்கு 2019— சீனா | | 09-29 ஆவணி | 167122.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| உலகாவிய பிள்ளைகள் போசணை கருத்தரங்கு (கல்வி சுற்றுலா) | 01 | 01-08 மார்கழி | 59326.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பயிற்சி பாடநெறி – USA – உலக வங்கி தொழில் மற்றும் குடியகல்வு இணை பாடநெறி | 01 | 27-ஐப்பசி - 10 கார்த்திகை | 104051.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| வரையறுக்கப்பட்ட மெட்ரோ டெல்லி இயக்க கூட்டுறவுக் கருத்தரங்கு - இந்தியா | 01 | 16-21 புரட்டாதி | 36976.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| தெற்காசியாவின் சேவை வழங்கும் முறைகள் – தாய்லாந்து | 01 | 2-4 மார்கழி | 29663.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| பிராந்திய குடி நீரும் துப்புரவு ஏற்பாடும் உலகாவிய ஆய்வுக்கான செயலமர்வும் குடி நீர் துப்புரவு ஏற்பாடுக்கான மதிப்பீடும் குடி நீர், துப்புரவு ஏற்பாடு ஆகியவற்றுக்கான கண்காணிப்பு முன்னேற்றம் என்பவற்றுக்கான தடய துடுப்புக் கருவிகள் - இந்தியா | 01 | 15-17 ஐப்பசி | 44384.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| இலங்கை இளம் தலைவர்களுக்கான விவசாய வியாபாரம்/ சுற்றுலா விவசாயக் கற்கை - ஜப்பான் | 01 | 21 ஆவணி - to 08 புரட்டாதி | 138057.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| சர்வதேச திறன்கள் மன்றம் - எதிர்கால திறன்கள் மற்றும் பணிகளில் டிஜிட்டல் சீர்குலைவின் காலம்- பிலிப்பைன்ஸ் | 01 | 27-29 ஆவணி | 69023.00 | | வெளிநாட்டு | - அவ்வாறே - |
| கற்கை நெறிப் பயிற்சி, 6வத பிராந்திய கற்கை நெறிப் பயிற்சி அபிவிருத்திக்கான தேசிய உபாயம் - சீனா | 01 | 11-14 கார்த்திகை | 69210.00 | | வெளிநாட்டு | -அவ்வாறே - |
| முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | 03 | 2019-2021 | 410,860.00 | ஐஅடொ **523,498** | வெளிநாட்டு | -அவ்வாறே - |

# அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1. | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | **இணக்கமானது** | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | **இணக்கமானது** | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் வர்த்தக முற்பணக் கணக்குகள் | **பொருந்தாது** | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | **பொருந்தாது** | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | **பொருந்தாது** | | |
| 1.6 | ஏனையவை | **பொருந்தாது** | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (FR445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையன சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 2.5 | ஆனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொதுத்திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | **இணக்கமானது** | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 2.7 | பொதுப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல | **இணக்கமானது** | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 3 | **நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (FR 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | **இணக்கமானது** | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | **இணக்கமானது** | | |
| 3.3 | ஓவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது | **இணக்கமானது** | | |
| 3.4 | 11.05.2014 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | **இணக்கமானது** | | |
| 4 | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் | **இணக்கமானது** | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல் | **இணக்கமானது** | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத்திட்டம் திட்டம் தயாரித்தல் | **பொருந்தாது** | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | **இணக்கமானது** | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத் பதில் அளிக்கப்பட்டுள்ளது | **இணக்கமானது** | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | **இணக்கமானது** | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | | | |
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | 134(2)) DMA/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | **பொருந்தாது** | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | **இணக்கமானது** | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | **பொருந்தாது** | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும 134(3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | **பொருந்தாது** | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு** | | | |
| 7.1 | DMA 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | **இணக்கமானது** | | |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | **இணக்கமானது** | சுற்றறிக்கை மூலம் சகல சொத்துக்களின் விபரங்களும் 2017 இல் இருந்து கம்ப்ரோலர் ஜெனரலுக்கு அனுப்ப வேண்டும் | இற்றைப்படுத்தப்பட்ட விபரங்கள் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் | **இணக்கமானது** | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 5/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | **இணக்கமானது** | | |
| 8.5 | நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | **இணக்கமானது** | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | **இணக்கமானது** | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்கு அகற்றப்படுதல் வேண்டும் | **இணக்கமானது** | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் புதுப்பிக்கப்படல் வேண்டும் | **இணக்கமானது** | | |
| 9.4 | ஓவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103இ 104இ 109 மற்றும் 110 இன்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் | **இணக்கமானது** | | |
| 9.5 | சுற்றறிக்கை இல 29.12.2016 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 30/2016 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையை மீண்டும் பரிசீலித்தல் | **இணக்கமானது** | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்பகம் குத்தகைக்காலத்தின் பின்னர் மாற்றப்படும் | **இணக்கமானது** | | |
| 10 | **வங்கிக்கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிற்கு அறிக்கைகளை தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | **இணக்கமானது** | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல் | **இணக்கமானது** | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளிப்படுத்துதல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல் | | | |
| 11 | **நிதி ஏற்பாட்டைப்பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல் | **இணக்கமானது** | | |
| 11.2 | நி.பி. 94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும் | **இணக்கமானது** | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | **இணக்கமானது** | | |
| 12.2 | நிலுவையில் உள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல் | **இணக்கமானது** | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | **இணக்கமானது** | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | **இணக்கமானது** | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக்கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 14 | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | **இணக்கமானது** | | |
| 14.2 | நி.பி. 371 இன் பிரகாரம் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீரக்கப்படும் | **இணக்கமானது** | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்கால இடைக்கால வழங்கல் | **இணக்கமானது** | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | **இணக்கமானது** | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | **இணக்கமானது** | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | **பொருந்தாது** | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | **இணக்கமானது** | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | **இணக்கமானது** | | |
| 16.3 | 20.09.2017 திகதியிடப்பட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | **இணக்கமானது** | | |
| 17 | **பொது மக்களுக்கான தகவல்களை வழங்குதல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | **இணக்கமானது** | | |
| 17.2 | தகவல் உரிமைச்சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | **இணக்கமானது** | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | **பொருந்தாது** | | |
| 18 | **பிரசைகள் பட்டயத்தினைச் செலுத்துதல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கை இல 05/2008 மற்றும் 05/2018(1) இன்படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயற்படுத்தவும் அதனைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | **இணக்கமானது** | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல | **இணக்கமானது** | | |
| 19 | **மனித வளத்திட்டத்தினைத் தயார் செய்தல்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.1 | 24.01.2018 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத்திட்டம் தயாரித்தல் | **இணக்கமானது** | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்குக் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத்திட்டம் உறுதி செய்ய வேண்டும் | **இணக்கமானது** | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கை இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்றிறன் ஒப்பந்தம் கையெழுத்தப்பட்டுள்ளது | **இணக்கமானது** | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத்திட்டம், திறன் மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்துதல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல் | **இணக்கமானது** | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளுக்கான சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல் | **இணக்கமானது** | | |